# வேத பாரதி
## செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly
தமிழ் மாத இதழ்

மலர் : 7 இதழ்: 5 பிப்ரவரி: 2023 ரூ.20/-
Volume: 7 Issue: 5 February : 2023 Rs.20/-



# SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14



# அஷ்டோத்ர ஸத சுக்ர வார
# ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம்

**22வது பாராயணம் - 06.01.2023 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமி திருக்கோயில்**
ஆதம்பாக்கம், சென்னை - 88.

**23வது பாராயணம் - 13.01.2023 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ திரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ மருந்தீஸ்வரர் திருக்கோயில்**
திருவான்மியூர், சென்னை - 41.

**24வது பாராயணம் - 20.01.2023 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ கந்தாஸ்ரமம், சேலையூர் கிழக்கு தாம்பரம்**
சென்னை - 600 073.

**25வது பாராயணம் - 27.01.2023 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ வடிவுடையம்மன் ஸமேத தியாகராஜ சுவாமி திருக்கோயில்**
திருவொற்றியூர், சென்னை - 600 019.

**26வது பாராயணம் - 03.02.2023 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி அம்மன் கோயில்**
நேருநகர், அண்ணாநகர், சென்னை - 600 040.

**தொடர்ந்து 108 கோவில்களில் பிரதி வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயண வைபவத்தில் நாமும் பங்கு பெறுவோம்.**

**மேலும் தொடர்புக்கு : 9444060346**

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.

## வேதமந்திரம் - 42

**ஸர்வம் ஹ்யேத1த்3 ப்3ரஹ்ம, "அயமாத்1மா ப்3ரஹ்ம"**
**- மாண்டூ3க்1ய உப1நிஷத்1**

**பொருள் :** இது அதர்வ வேத மஹாவாக்யம் இது எல்லாம் ப்ரம்மமே. இந்த ஆத்மாவும் ப்ரம்மமே.

இம்மந்திரம் நான்கு ப்ரஸித்தமான மஹாவாக்யங்களில் ஒன்றாகும். இந்த சரீரத்தில் கர்த்ருத்வ (செயலாற்றுபவனாக) போக்த்ருத்வ (அநுபவிப்பவனாக) உள்ள இந்த ஜீவாத்மா உண்மையில் ப்ரம்மமாகவே இருக்கிறது. அறியாமையினாலேயே நாம் ஜீவத்வத்தை (நான் தன்மை) கொண்டிருக்கிறோம்.ஜீவத்வம் மறையும் பொழுது இருக்கக் கூடியதே ப்ரம்ம ஸ்வரூபம்.

|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||

# வேதபாரதி செய்திகள்

(ஆன்மீக மாத இதழ்)

மலர்: 7 இதழ்: 5

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23

RNI No : 1282188

Title Code : TNTAM/2016/73726

R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**

(Tamil Monthly Magazine)

Published on : 1-7th (1st Week) Every Month

TN/PM G (CCR) / WPP 605/21-23 /
Valid from 01.01.2021 to 31.12.2023

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதிதெரு, இந்திராநகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,
செ - 42. போன்: 9025864231


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு... | 5 |
| மாசி மாத விசேஷங்கள் | 6 |
| அட்டைப்பட விளக்கம் | 7 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 10 |
| ஸ்ரீமத் பாகவதம் | 13 |
| ஸ்ரீ ஆதிசங்கரர் | 16 |
| அறுபத்தி மூன்று நாயன்மார்கள் | 19 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 21 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 22 |
| தர்மத்தின் குரல் | 23 |
| தெரிந்து கொள்வோம் | 24 |
| ஔவையார் | 26 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 31 |
| சாதனைப்பறவைகள் | 36 |
| யானை | 39 |
| தருவின் நிழலில் | 41 |
| இராமாயணம் காட்டும் பாதை | 46 |
| மனம் தரும் தனம் | 49 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட

**VEDABHARATHI**
City Union Bank, Velachery Branch
A/c No. 510909010005286
IFSC : CIUB 0000262



நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**D. சூரியநாராயணன்**
**Cell : 98841 05302**

**R. வெங்கட்ராமன்**
**Cell : 94434 95950**

Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

# ஒரு நிமிடம் உங்களோடு...

## 56. ஆகர்ஷணங்கள்

**“ஆகர்ணஷம்”** என்றால் **“ஈர்ப்பு”** என்று பொருள்.

நம்முடைய மனதில் மூன்று விதமான **“ஆகர்ஷணங்கள்”** (ஈர்ப்புக்கள்) இருக்கின்றன. ஒன்று **“காமம்”,** இரண்டாவது **“ஸ்நேகம்”** மூன்றாவது ஆகர்ஷணம் **“ப்ரேமம்”.**

**1. காமம் :** மற்றொரு சரீரத்துடன் தோன்றுகிற ஒரு ஈர்ப்பு. இந்த சரீரத்துடன் ஒரு சுகம் கிடைக்கும் என்றஒரு திடமான நம்பிக்கை. இந்த “காமம்” எல்லா ஜீவராசிகளுக்கும் உண்டு.

**2. ஸ்நேகம் :** இந்த ஈர்ப்பு சற்று உயர்ந்தது. இஷ்டப்பட்டவரை பார்க்கும் போதோ அல்லது அவரைப் பற்றி கூறும்போதோ அல்லது அவர் நம்மிடம் பேசும்போதோ நமக்கு ஒரு சுகம் உண்டாகும். இதற்குத்தான் **“ஸ்நேகம்”** என்று பெயர். **“ஸ்நேக பந்தங்கள்”** என்று கூறுவோம். நமக்கு வயதாக, வயதாக இந்த ஸ்நேக பந்தம்தான் வரும். இது காமத்தைப்போல் இந்திரியங்களால் ஏற்படுவதில்லை. இது மனதால் ஏற்படுவது. மனதை திருப்திபடுத்தினால் போதும்.

**3. ப்ரேமம் :** காமத்தையும், ஸ்நேகத்தையும் எல்லோரும் தெரிந்து வைத்துள்ளார்கள். ஆனால் “பிரேமம்” பற்றி பலருக்கும் தெரியாது. இந்த ஈர்ப்பு சரீர சம்பந்தப்பட்டதும் அல்ல மனது சம்பந்தப்பட்டதும் அல்ல. இது புத்தியும், மனதும், விவேகமும், விகாரமும் சேர்ந்த ஒரு அவஸ்த்தை. ப்ரேமத்தைப் பற்றி எனக்குத் தெரியும் என்று யாராவது கூறினால் அவர்கள் நினைப்பது physical love ஐத்தான். நம்முடைய மனதை அமைதியுடன் தியானத்திலும், பரமாத்மாவிடமும் சேர்த்தால் நமக்குக் கிடைப்பதுதான் **“ப்ரேமம்”.**

நாம் பிரேமத்தை உணரவில்லையானால் நம்முடைய வாழ்க்கை காமத்திலும், ஸ்நேகத்திலும் மட்டும் மூழ்கி வீணாகும்.

**D. சூரியநாராயணன்**

## சுபக்ருது வருஷம் - மாசி மாத விசேஷங்கள்
**(பிப்ரவரி 13.02.2023 முதல் மார்ச் 14.03.2023 வரை)**

| | | | |
|---|---|---|---|
| 13.02.2023 | மாசி 1 | திங்கள் | விஷ்ணு பதி புண்ய காலம் |
| 14.02.2023 | மாசி 2 | செவ்வாய் | அனுஷம் |
| 16.02.2023 | மாசி 3 | வியாழன் | ஏகாதசி |
| 18.02.2023 | மாசி 6 | சனி | ப்ரதோஷம், மஹாசிவராத்திரி |
| 20.02.2023 | மாசி 8 | திங்கள் | அமாவாஸை |
| 23.02.2023 | மாசி 11 | வியாழன் | சதுர்த்தி |
| 25.02.2023 | மாசி 13 | சனி | சஷ்டி |
| 27.02.2023 | மாசி 15 | திங்கள் | க்ருத்திகை |
| 03.03.2023 | மாசி 19 | வெள்ளி | ஏகாதசி |
| 04.03.2023 | மாசி 20 | சனி | ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி சுவாமிகள் ஆராதனை, ப்ரதோஷம் |
| 05.03.2023 | மாசி 21 | ஞாயிறு | நடராஜர் அபிஷேகம் |
| 06.03.2023 | மாசி 22 | திங்கள் | மாசி மகம் |
| 07.03.2023 | மாசி 23 | செவ்வாய் | பௌர்ணமி |
| 10.03.2023 | மாசி 26 | புதன் | சங்கடஹர சதுர்த்தி |
| 13.03.2023 | மாசி 29 | திங்கள் | சஷ்டி, அனுஷம் |

### 20.02.2023 திங்கட்கிழமை - அமாவாஸை

ஸ்ரீ சுபகிருது நாம ஸம்வத்ஸரே உத்தராயணே சசிர ருதௌ, கும்ப மாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாம் புண்யதிதௌ வாஸர: வாஸரஸ்து இந்து வாஸர யுக்தாயாம் ச்ரவிஷ்டா நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம்குண ஸகல விசேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

## அட்டைப்பட விளக்கம்

## ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் ஜெயந்தி

**பகவான் எண்ணற்ற மஹான்களை இந்த பாரதத்தில் தோற்றுவித்துள்ளார். அத்தகைய மஹான்கள் நிலையில்லாத இந்த உலகில் மக்களின் அன்றாட இன்னல்களுக்கு அருமருந்தாக இருந்து வழிகாட்டினார்கள். அந்த மஹான்களின் வரிசையில் தோன்றி இன்றும் ஆந்திர பிரதேசத்தில் உள்ள மந்த்ராலயத்தில் பிருந்தாவன வாசியாய் தன்னை சேவிக்க வரும் பக்தர்களுக்கு அருளாசியை வழங்கிக் கொண்டிருக்கிறார் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள்.**

*ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இந்துமத மஹான். இவர் வைணவ நெறியையும் மத்வர் நிலைநாட்டிய* **“துவைத”** *மதத்தையும் போதித்தவர். இவரை பக்த பிரஹலாதரின் அவதாரமாக கருதுகிறார்கள்.*

*விஜயநகரப் பேரரசர்களின் ஆட்சிக்கு உட்பட்ட* **“ஹம்பி”** *என்னும் சிறிய கிராமத்தில் வேத விற்பன்னரான* **“திம்மண்ணபட்டர்”** *தன் மனைவி கோபிகாம்பாளுடன் வாழ்ந்துவந்தார். குழந்தை பாக்கியம் இல்லாத அவர்கள் தங்கள் வேதனையைப் போக்கவல்லவன் வேங்கடவனே என நினைத்து திருப்பதிக்குச் சென்றார்கள். திருமாலின் அருளால் அவர்களுக்கு ஒரு பெண்ணும் ஒரு ஆணும் பிறந்தார்கள். சிறிது காலத்திற்கு பிறகு திம்மண்ணபட்டர் ஹம்பியை விட்டு தமிழ் நாட்டில் சிதம்பரத்தை அடுத்த “புவனகிரி” என்றஊருக்கு குடி வந்தார்கள்.*

*சிறிது காலத்திற்குப் பின் மகப்பேறு தந்த மலையப்பனுக்கு நன்றி தெரிவித்து வணங்க தன் மனைவியுடன் மீண்டும் திருமலைக்குச் சென்றார் திம்மண்ணபட்டர். இந்த முறையும் வேங்கடவன்*

அவர்களுக்கு அருள்புரிந்தார். அதன் பலனாக **1595**ஆம் ஆண்டு பால்குண ஆண்டு. சுக்லபட்க்ஷ சப்தமி, வியாழக்கிழமை, மிருகசீர்ஷ நட்க்ஷத்திரத்தில் மூன்றாவதாக ஒரு ஆண்குழந்தை பிறந்தது. வெங்கடேசன் அருளால் குழந்தை பிறந்ததால் குழந்தைக்கு **“வேங்கடநாதன்’’** என்றே பெயரிட்டார்கள். குழந்தைக்கு மூன்று வயது நிரம்பியதுமே வித்யாப்பியாசம் செய்துவைத்தார் திம்மண்ணர். சிறுவயதிலேயே நல்ல அறிவாற்றலுடன் திகழ்ந்தார் வேங்கடநாதர்.

திம்மண்ணபட்டரின் மறைவிற்கு பிறகு வேங்கடநாதர் தன் அண்ணன் திருகுருராயரிடம் வளர்ந்தார். ஸரஸ்வதி கடாக்ஷம் நிரம்பப் பெற்ற வெங்கடநாதனுக்கு அவருடைய அண்ணா “சரஸ்வதி’’ என்ற பெண்ணைத் திருமணம் செய்துவைத்தார். திருமணத்திற்கு பிறகும் வேங்கடநாதனுக்கு இரை தேடலைவிட, இறைதேடலே பிடித்திருந்தது. அதனால் அவன் ஒரு குருவை தேடி அலைந்தான். கும்பகோணத்தில் இருந்த “ஸ்ரீசுதீந்திர தீர்த்தர்’’ என்னும் மத்வ மகானைத் தன் குருவாக ஏற்றுக்கொண்டார். சில காலம் சென்றபின் 1621 ஆம் ஆண்டு பால்குண மாதம், சுக்கில பக்ஷம், துவிதியை அன்று ஸுதீந்திர மடத்தின் பீடாதிபதியாக ஸ்ரீராகவேந்திர தீர்த்தராக பொறுப்பேற்றார்.

மத்வ பீடாதிபதியாகப் பொறுப்பேற்றபின் சில ஆண்டுகள் பல ஊர்களுக்கு தீர்த்த யாத்திரை சென்றபின் கடைசியாக துங்கபத்ரா நதிக்கரையில் இருந்த “மாஞ்சாலம்’’ என்ற கிராமமே கிருதாயுகத்தில் தாம் பிரகலாதனாக இருந்தபோது யாகம் செய்த பூமி என்பதை உணர்ந்து அங்கேயே தமக்கு பிருந்தாவனம் அமைத்துக்கொள்ள தீர்மானித்து கி.பி. 1671 ஆம்

ஆண்டு (விரோதிகிருது) ஆவணிமாதம், கிருஷ்ணபட்சம், துவிதியை திதியுடன் கூடிய வியாழக்கிழமையன்று சுற்றிலும் தம்முடைய சீடர்களும் பக்தர்களும் சூழ்ந்திருக்க பிருந்தாவன பிரவேசம் செய்தார் ஸ்ரீராகவேந்திர மஹான்.

மஹான் ஸ்ரீராகவேந்திரர் இன்றும் மந்த்ராலயத்தில் உள்ள பிருந்தாவனத்தில் தனது சூட்சும சரீரத்தோடு வாசம் செய்துகொண்டு கற்பக விருட்க்ஷமாக, காமதேனுவாக தன்னை வேண்டி வருகிறவர்களுக்கு வேண்டுவன யாவும் தந்துகொண்டிருக்கிறார்.

ஸ்ரீமஹாபெரியவாளும், ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளும் இருவரும் ஒரே பணிக்காக இறைவனால் அனுப்பப்பட்டவர்கள். ஸ்ரீமஹாபெரியவா ஸ்ரீராகவேந்திரர் மீது தீராத பக்தி செலுத்திவந்தார். இருவருமே சாஸ்திரங்களை வழுவாமல் பின்பற்றவேண்டும், பரோபகார சிந்தனையோடு வாழவேண்டும் என்று நமக்கு போதித்தவர்கள். ஸ்ரீமஹாபெரியவா ஸ்ரீ ஆதிசங்கரர் வழி வந்தவர், ஸ்ரீ ராகவேந்திரர் மத்வாச்சாரியரின் வழி வந்தவர்.

ஸ்ரீராகவேந்திரரின் **428**ஆவது ஜெயந்தி இந்தவருடம் 26.02.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று நிகழவுள்ளது. அன்றைய தினம் இந்த மஹானுக்குரிய கீழ்க்கண்ட மந்திரத்தை உண்மையான பக்தியுடன் ஜெபித்து அவரை வழிபடுபவர்களுக்கு அனைத்து நன்மைகளும் உண்டாகும்.

**பூஜ்யாய ராகவேந்த்ராய சதய தர்ம ரதாயச/**
**பஜதாம் கல்பவ்ருக்ஷாய நமதாம காமதேனவே//**

**D. சூரியநாராயணன்**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 46

## அத்தியாயம் – 2
## “ஸாங்கிய யோகம்”

*அடுத்துவரும் ஸ்லோகங்கள் 62 மற்றும் 63 ஆகியவற்றில் பகவான் அர்ஜுனனுக்கு புலனடக்கமும் அதனால் ஏற்படும் நன்மைகளைக் குறித்தும் விளக்குகிறார். இந்த இரண்டு ஸ்லோகங்களும் மிக மிக முக்கியமானவை. இரண்டு ஸ்லோகங்களின் அர்த்தத்தையும் ஒன்றாக படித்தால்தான் நன்றாக புரிந்துகொள்ள முடியும்.*

**த்[4]யாயதோ விஷயான் பும்ஸ:**
**ஸங்க[3]ஸ்தேஷூபஜாயதே/**
**ஸங்கா[3]த்ஸஞ்ஜாயதே காம:**
**காமாத்க்ரோதோ[4]பி[4]ஜாயதே// (கீதை 2-62)**
**க்ரோதா[4]த்[3]ப[4]வதி ஸம்மோஹ:ஸம்மோஹாத்**
**ஸ்ம்ருதிவிப்[4]ரம:/**
**ஸ்மிருதிப்[4]ரம்ஸாத்[3]பு[3]த்[3]தி[4]நாஸோ**
**பு[3]த்[3]தி[4]நாஸாத்ப்ரணஸ்யதி// (கீதை 2-63)**

**பொருள் : (ஸ்லோகம் 62,63)**

*பொருள்களை நினைப்பதால் பற்று உண்டாகிறது. அந்த பற்று ஆசையாக மாறுகிறது. ஆசை சினமாக வடிவெடுக்கிறது. சினத்தால் மனக்குழப்பமும், மனக்குழப்பத்தால் நினைவின்மையும், நினைவு நாசத்தால் புத்திநாசமும் ஏற்படுகிறது. புத்தி நாசத்தால் அவன் அழிகிறான்.*

**விளக்கம் :** *மனிதனுக்கு ஆசையிலிருந்துதான் எல்லா அழிவுகளும் உருவாகின்றன. இந்த ஆசை*

சிறுவயதிலேயே துவங்கிவிடுகிறது. குழந்தையை திருவிழாவிற்கோ அல்லது கடைக்கோ அழைத்துச் சென்றால் அங்கு விற்கும் பலூன், கார், பொம்மைகள் மற்றவிளையாட்டுப் பொருட்களைப் பார்த்தால் அவற்றைவாங்கி விளையாட வேண்டும் என்ற ஆசை அவனுக்கு ஏற்படுகிறது. அப்பாவிடம் அதை வாங்கித்தருமாறு கேட்கிறான். ”அப்பா சும்மா இருடா. அதெல்லாம் இப்போ வாங்கமுடியாது” என்று கூறினால் அந்த குழந்தைக்கு கோபம் வரும். வாங்கக்கூடாது என்று கூறும் தன் அப்பாவின் மீதும் வெறுப்பு வரும். அழ ஆரம்பித்துவிடுவான்.

சிறு வயதில் இப்படி என்றால் சற்று வளர்ந்துவிட்டால்? பருவ வயது வந்த ஒரு வாலிபன் ஒரு அழகான பெண்ணைப் பார்க்கிறான். அவளுடைய அழகில் மயங்குகிறான். அவளை அடைய வேண்டும் என்ற ஆசை அவன் மனதில் எழுகிறது. அவளை துரத்தி துரத்தி காதலிக்கிறான். தன் காதலையும், விருப்பத்தையும் அவளிடம் தெரிவிக்கிறான். ஆனால் அந்த பெண் அவனுடைய காதலை மறுக்கும்போது அவள்மீது கட்டுப்படுத்த முடியாத கோபம் அவனுக்கு வருகிறது. அந்த கோபம் அவனுடைய புத்தியை பேதலிக்க வைக்கிறது. அதன் விளைவு ஒன்று தன்னை மாய்த்துக்கொள்கிறான் அல்லது அந்த பெண் மீது ஆசிட் வீசுவது அல்லது அவளை கொலையும் செய்துவிடுகிறான். இதுபோன்ற சம்பவங்களை நாம் தினசரி பேப்பரில் படிக்கிறோம் அல்லது டி.வி.யில் பார்க்கிறோம்.

ஒரு பொருளை ஒருவன் **“இது என்னுடையது”** என்று கூறுகிறான். அந்த பொருளை மற்றொருவன் அபகரித்துக் கொண்டால் உடனே இவனுக்கு கோபம்

வருகிறது. கோபத்தால் மயக்கம் வருகிறது. அந்த நேரத்தில் என்ன செய்ய வேண்டும் என்ற எண்ணமும் அவனைவிட்டு போய்விடுகிறது. அதனால் கொலையும் செய்யத் துணிகிறான். இவ்வளவிற்கும் காரணம் அவனுடைய **“எனது”** என்ற எண்ணமே ஆகும்.

அரசம் விதை கண்ணுக்குத் தெரியாத மிகவும் சிறியது. அது ஒரு கட்டிடத்தின் கற்களுக்கு இடுக்கில் விழுந்து வேர் விட்டு செடியாகி பின் பெரிய மரமாகி அந்த கட்டிடத்தையே தகர்த்துவிடுகிறது. இதுபோல் நம் மனதில் எண்ணங்கள் நுண்ணியதாக புகுந்து பெரியதாக பரிணமித்து மனிதனையே மாற்றிவிடுகிறது.

**யாதனின் யாதனின் நங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன். (குறள் 35-341)**

**பொருள் :** ஒருவன் எந்தெந்தப் பொருளிலிருந்து பற்று நீங்கியவனாக இருக்கிறானோ, அந்தப் பொருளால் அவன் துன்பம் அடைவதில்லை.

**“ஆசையே துன்பத்திற்கு காரணம்”** என்பது புத்தரின் சீரிய போதனை.

கீதை தொடரும்...

99940 89133 99940 89140



SRI SASTHA CATERING



We are Supplying Meals,
Tiffin & Marriage Sear
Variation in Order



14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.

# ஸ்ரீமத் பாகவதம்

*(ஸத்யம் பரம் தீமஹி)*

பரிதி

பகுதி - 26

**ஸ்ரீமத் பாகவதத்தில்** *3ஆவது ஸ்கந்தத்தில் மொத்தம் 33 அத்தியாயங்கள் உள்ளன. அந்த 33 அத்தியாயங்களில் மொத்தம் 1411 ஸ்லோகங்கள் உள்ளன. அத்தியாயங்கள் 1 முதல் 8 வரையிலும் விதுரர் மைத்ரேயர் சம்வாதங்களும், ப்ரம்மாவின் தோற்றமும், ஸ்ருஷ்டிகளின் பாகங்களும் விவரிக்கப்பட்டுள்ளன.*

**அத்தியாயம் 9ல்** *ஸ்லோகம் 1 முதல் 25 வரையிலும்* **"பிரம்ம ஸ்துதி"** *வருகிறது. "ஸ்துதிகள்" பகவானின் புகழையும் தெய்வீக அம்சங்களையும் வர்ணித்து பாடும் பாடல்களாகும். அவற்றின் அர்த்தங்கள் ஆழமானவை, கம்பீரமானவை. ஸ்ரீமத் பாகவதத்தில் மொத்தம் ஆறு ஸ்துதிகள் வருகின்றன. அவற்றில்* **"குந்தி ஸ்துதி"** *மற்றும்* **"பீஷ்ம ஸ்துதி"** *ஆகிய இரண்டும் முதல் ஸ்கந்தத்தில் வருகிறது.*

*அத்தியாயம் 13 :* **"வராஹ அவதாரம்"** *இதில் உள்ள 50 ஸ்லோகங்களில் பகவான் எடுத்த* **"வராஹ அவதாரம்"** *குறித்து விஸ்தரித்து கூறப்பட்டுள்ளது. பகவான் எடுத்த* **"வராஹ அவதாரம்"** *(பன்றி) இரண்டாவது அவதாரம்.*

*பிரம்மா உலகை சிருஷ்டிக்க ஆரம்பித்தபோது அவரிலிருந்து தோன்றிய சுவாயம்பு மனு, சதரூபை ஆகிய இருவரையும் தம்பதிகளாக்கி அவர்களிடம் மக்களைப்பெற்று இந்த பூமியாகிய உலகத்தை ஆண்டுவாருங்கள் என்றார். அப்போது அவர்கள் பிரம்மாவிடம் "பூமியா?" அது எங்கே இருக்கிறது கண்களுக்கு தென்படவில்லையே" என்றார்கள்.*

*அப்போதுதான் பிரம்மாவிற்கு ஹிரண்யாக்ஷகன் என்ற அசுரன் பூமியை கைப்பற்றி கடலுக்கடியில்*

*எடுத்துச் சென்றது ஞாபகத்திற்கு வந்தது. உடனே பிரம்மா பகவானை பிரார்த்தித்து கண்மூடி தியானித்தார்.*

*பூமியை காக்கும் பொருட்டு பகவான் "வராஹ" (பன்றி) அவதாரம் எடுத்து இரண்யாக்ஷகனை போரில் வதைத்து பூமியை மேலே கொண்டு வந்து ஜலத்தில் வைத்துவிட்டு மறைந்தார். பிரம்மதேவன் சுவாயம்பு மனுவை அழைத்து பூமண்டலத்தை அடைந்து பிரஜைகளுடன் வாழ்ந்துவருமாறு அனுக்கிரஹித்தார்.*

**அத்தியாயம் 14 - திதி தேவியின் கர்ப்பம் :** *இந்த அத்தியாயத்தில் மொத்தம் 50 ஸ்லோகங்கள் உள்ளன. இவை ஹிரண்யாக்ஷனின் தோற்றமும் மறைவும் குறித்து விளக்குகிறது.*

*ஒரு நாள்* **"காசியப் பிரஜாபதி"** *தம்முடைய ஆஸ்ரமத்தில் சந்த்யா வேளையில் பகவானை தியானித்து ஹோமம் செய்து கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அவருடைய மனைவியான "திதி" அங்கு வந்தாள். காமத்தால் பீடிக்கப்பட்ட அவள் தன் கணவருடன் சேர விரும்பினாள். ஆனால்* **"காசியப் பிரஜாபதி"** *அவளிடம் "இது சந்த்யாகாலம், பூதங்கள் சஞ்சரிக்கும் காலம், இது தகுந்தகாலம் அல்ல" என்றார். காம மோகத்தால் கட்டுண்டு கிடந்த திதியின் காதுகளில் அவரின் சொற்கள் ஏறவில்லை. அவள் தனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதிலேயே முனைப்பாக இருந்தாள். இதுவும் விதியின் செயல் என்று எண்ணி காசியபர் அவளுடைய கோரிக்கையை நிறைவேற்றியபின் கோபத்தால் அவளிடம் "மதி கெட்டவளே" எனது சொல்லைக் கேட்காமல் நடந்துகொண்டு தேவர்களை அவமதித்தாய் அதனால் உனக்கு பயங்கரமான இரண்டு புத்திரர்கள் பிறப்பார்கள். பகவான் அவதாரம் எடுத்து அவர்களை வதைப்பார்" என்று கூறினார். இதைக்கேட்ட "திதி" தன்*

*செயலுக்கு வெட்கி தன் கணவரை வணங்கி நான் பூபதியான ருத்ரருக்கு அபராதம் இழைத்துவிட்டேன். அவர் என் கருவை சிதைக்காமல் இருக்க வேண்டும்" என்று வேண்டினாள். ஒரு நாள் "திதி" இரட்டைக் குழந்தைகளைப் பெற்றாள். முதலில் பிறந்த குழந்தைக்கு* **"ஹிரண்யாட்சன்"** *என்றும் இரண்டாவது பிறந்த குழந்தைக்கு* **"ஹிரண்யகசிபு"** *என்றும் பெயர் சூட்டினார் காஸ்யபர்.*

*கஸ்யபருடைய சாபத்தின்படி பகவான் ஹிரண்யாக்ஷகனை வராஹ அவதாரத்திலும்* **"ஹிரண்யகசிபுவை"** *நரசிம்ஹ அவதாரத்திலும் வதம் செய்தார் என்று பாகவதம் கூறுகிறது.* *தொடரும்...*

## பெற்றோர்களே கவனியுங்கள் - பாகம் 2 புத்தக வெளியீட்டு விழா

*08.01.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஸ்ரீ சங்கர வித்யாலயா கிழக்கு தாம்பரம் பள்ளி வளாகத்தில் ஸ்ரீமதி காந்தலக்ஷ்மி சந்திரமௌலி எழுதிய "பெற்றோர்களே கவனியுங்கள் பாகம் 2" புத்தக வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. புத்தகத்தை அமுதசுரபி ஆசிரியர் திரு. திருப்பூர் கிருஷ்ணன் அவர்கள் வெளியிட எழுத்தாளர் டாக்டர் ஷ்யாமா அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். ஸ்ரீமதி கலைவாணி அவர்கள் ஆய்வுரை வழங்கினார்கள். ஸ்ரீ திருப்பூர் கிருஷ்ணன் அவர்கள் புத்தகத்தில் உள்ள அரிய பல கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். டாக்டர் ஷ்யாமா அவர்கள் தனக்கும் ஸ்ரீமதி.காந்தலக்ஷ்மி சந்திரமௌலிக்கும் இருக்கக்கூடிய சிறந்த நட்பை பற்றியும் எடுத்து சொன்னார்கள். ஸ்ரீமதி காந்தலட்சுமி அவர்கள் ஏற்புரை வழங்கினார்கள். திருச்சி ஸ்ரீ சந்திரசேகர் வரவேற்புரை கூறினார்கள். வேதபாரதி செயலர் ஸ்ரீ வெங்கட்ராமன் நன்றியுரை கூறினார்கள்.*

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன் அத்தியாயம் – 6 அவதார மஹிமை பாகம் 17**

## அத்தியாயம் – 6
## குருவைத்தேடி

தாயிடம் உத்திரவு பெற்றுக்கொண்ட **"சங்கரர்"** காலடியிலிருந்து குருவைத் தேடி தன் பயணத்தை ஆரம்பித்தார். அவருடைய லக்ஷ்யம் மத்திய பிரதேசத்தில், நர்மதை நதி தீரத்தில் தவம் செய்துகொண்டிருக்கும் தன் குரு **"கோவிந்த பகவத் பாதரை"** காண வேண்டும் என்பதே.

சங்கரர் மூன்று நாட்கள் ஓய்வில்லாமல் கிராமங்கள், நகரங்கள் ஆகியவற்றை கடந்து நடந்தார். வழியில் பிக்ஷை கிடைக்கவில்லையானால் காய்கனிகளையே உண்டார். மூன்றாவது நாள் ஒரு வியாபாரிகள் கூட்டம் போய்க் கொண்டிருந்ததைக் கண்டார். அந்த கூட்டத்தில் ஏராளமான வண்டிகள், ஆடுகள், மாடுகள் முதலியன சென்று கொண்டிருந்தன. சங்கரர் அந்த கூட்டத்தில் சென்று அவர்கள் எங்கு செல்கிறார்கள் என்று கேட்க அவர்கள் கர்நாடகதேசத்தில் உள்ள கதம்பராஜ்யத்திற்கு செல்வதாக கூறினார்கள். அவர்களுடைய சம்மதத்துடன் சங்கரரும் அவர்களுடன் சேர்ந்துகொண்டார். அப்போது சங்கரருக்கு வயது 8 தான்.

சங்கரரின் யாத்திரை காடு மலைகளைக் கடந்து தக்ஷிண கர்நாடகம் நோக்கி சென்றுகொண்டே இருக்கிறது. அங்கு துங்காநதி தீரத்தில்

ஸந்த்யாவந்தனாதிகளை முடித்துக்கொண்டு ரமணீயமான அந்த இயற்கைச் சூழலை ரசித்துக்கொண்டு ஓர் இடத்தில் சிறிது நேரம் தங்கினார்.

அந்த நேரத்தில் சங்கரர் ஒரு அதிசயக் காட்சியைக் கண்டார். அந்த நதியிலிருந்து ஒரு கர்ப்பிணி தவளை வெளியே வந்து கடும் வெய்யிலில் ஓர் இடத்தில் உட்கார்ந்தது. அந்த நேரத்தில் ஒரு மரத்தின் பொந்திலிருந்து ஒரு பெரிய நாக பாம்பும் அங்கே வந்தது. தவளையும் பாம்பும் ஜன்ம விரோதிகள். ஆனால் அந்த பாம்பு நேராக அந்த தவளையின் அருகில் வந்து படம் எடுத்து குடை பிடிப்பதுபோல் அந்த தவளைக்கு வெய்யில் தாக்காமல் இருக்க நிழல் தந்தது. பரஸ்பரம் விரோதம் உள்ள பிராணிகள் எந்த விரோதமும் இல்லாமல் நிற்கின்றன. இதைப் பார்த்துக்கொண்டிருந்த சங்கரர் இதற்கான காரணத்தை தன் மனதிற்குள்ளேயே யோசித்தார். இயற்கையே அளித்த உணவாகிய தவளையைச் சாப்பிடாமல் அந்த பாம்பு அந்த தவளையிடம் அன்பு காட்டுகிறது என்றால் அதற்கு காரணம் அந்த இடத்தின் மஹிமையே என்று சங்கரருக்கு விளங்கிவிட்டது. இந்த இடத்தில் மஹாதபஸ்விகள் யாராவது இருந்திருக்க வேண்டும் என்று அவருக்கு தோன்றியது அதை நினைத்துக்கொண்டே அந்த நதி தீரத்தில் நடந்து சென்றார்.

வெகு தூரத்தில் ஓர் மலையடிவாரத்தில் அடர்த்தியான மரங்களுக்கு அடியில் ஒரு குடிசையைக் கண்டார் சங்கரர். அந்த குடிசையின் அருகில் சென்று பார்த்த போது அங்கே ஒரு சிவஸந்யாசி இருந்தார். சங்கரர் அவரிடம் அந்த இடத்தைப் பற்றி கேட்டார்.

*அந்த ஸன்யாசி சங்கரரைத் தன் ஆஸ்ரமத்திற்குள் அழைத்துச் சென்று பிக்ஷை நல்கி ஆதரித்தார். பிறகு சங்கரரிடம் "ஹே பால ஸ்வாமின், தாங்கள் காணக்கூடிய இந்த கம்பீரமான மலையின் பெயர்* **"ரிஷ்யச்ருங்ககரி".** *இந்த இடம் மஹாயோகியான* **"ரிஷ்யச்ருங்கமுனி"** *தவம் செய்த பவித்திரமான பூமி. அவருடைய தவத்திற்கு எந்தவிதமான இடையூறுகளும் நேராமல் இருக்க அவருடைய தந்தை* **"விபாண்டகர்"** *இந்த இடத்தில் மரங்களையும், மலைகளையும், நதிகளையும், சிங்கம் புலி போன்ற மிருகங்களையும் காவலுக்கு நிறுத்தினார்" என்றார்.*

*அதைக்கேட்ட சங்கரரின் மனதில் தோன்றியது "இது தபஸ்விகள் தபஸ் செய்வதற்கு ஏற்ற இடம். இங்கு ஒரு பெரிய மடம் வரவேண்டும்" என்று நினைத்தார். மஹான்கள் நினைத்தால் அது நடந்துவிடும். சங்கரர் நினைத்ததுபோல் பிற்காலத்தில் அந்த இடத்தில் ஒரு சாரதாம்பிகை க்ஷேத்ரம் உண்டாயிற்று.*

*சங்கரர் அந்த ஸன்யாசியிடம் அனுமதி வாங்கிக்கொண்டு வடக்கு நோக்கி தன் யாத்திரையைத் தொடர்ந்தார்.*

தொடரும்......

## அடுத்த இதழில்

- *திருச்சி ஸ்ரீ கணேசன் அவர்கள் எழுதிய ஷண்மத கோட்பாடு கட்டுரை*
- *பெற்றோர்களே கவனியுங்கள் பாகம் - 1 பள்ளி ஆசிரியர்களின் கருத்துக்கள்*

## வாசகர் கடிதம்

*ஜனவரி 2023 வேதபாரதி செய்திகள் ஆன்மீக பத்திரிகை படிக்கும் பாக்கியம் பெற்றேன். உத்தமமான நல்ல உள்ளங்களால் கொடுக்கப்படும் கட்டுரைகள் எங்கள் குடும்பத்தை ஈர்த்தது.*

**-சுதாகர், ஈரோடு**

# அறுபத்தி மூன்று (63) நாயன்மார்கள்

*அருணன்* *4/63*

## 4. இளையான்குடி மாற நாயனார்

பரமக்குடியிலிருந்து காளையார் கோவில் செல்லும் வழியில் உள்ள ஊர் **"இளையான்குடி".** இந்த ஊரில் "மாறனார்" என்ற வேளாளச் செல்வர் ஒருவர் இருந்தார். இவர் ஒரு சிறந்த சிவ பக்தர். சிவனடியார்கள் எத்தனைபேர் வந்தாலும் அவர்களை வரவேற்று உபசரித்து விருந்தளித்து அனுப்புவார். இவர் சிவனடியார்கள் மீது கொண்டுள்ள பக்தியை உலகிற்கு காட்ட நினைத்த ஈசன் அவருக்கு வறுமை வந்து அமையும்படி செய்தார். அப்போதும் அவர் சிவனடியார்கள் தொண்டை நிறுத்தவில்லை. கையில் உள்ள தம்முடைய பொருட்களை எல்லாம் விற்று தொண்டு புரிந்துவந்தார்.


அது ஒரு மழைக்காலம். மாறனார் அவர்கள் தம்மிடம் இருந்த நெல்லில் பாதியை குத்தி அரிசியாக்கி அன்று வந்த சிவ தொண்டர்களுக்கு உணவு அளித்துவிட்டு மீதி நெல்லை வயலில் விதைத்துவிட்டு வந்துவிட்டார். அன்று இரவு நல்ல மழை. மாறனாரை சோதிக்க நினைத்த இறைவன் ஒரு சிவனடியார் வேடமிட்டு மாறனார் வீட்டிற்கு வந்து **"பசி"** என்று யாசித்தார். வந்திருப்பது இறைவன் என்பதை அறியாத மாறனார் அவரை ஒரு சிவனடியார் என்று நினைத்து அவரை வரவேற்று அவர்மீது இருந்த ஈரத்தைத் துடைத்து அமரச் செய்தார். வீட்டில் எந்த பண்டமும் இல்லை. இந்த இரவு நேரத்தில் என்ன செய்வது என்று யோசித்த மாறனாருக்கு காலையில் வயலில் விதைத்த நெல் ஞாபகத்திற்கு வந்தது.

சிவனடியாரை சற்று ஓய்வு எடுக்கும்படி

கூறிவிட்டு ஒரு கூடையை எடுத்துக்கொண்டு கொட்டும் மழையில் தன் வயலிற்குச் சென்று பார்த்தபோது காலையில் விதைத்த நெல்மணிகள் வெள்ளத்தில் மிதந்திருந்தது அதை சேகரித்து கூடையில் போட்டுக்கொண்டு வீட்டிற்கு வந்தால். வீட்டில் விறகு இல்லை. வீட்டின் மேற்கூரையில் கட்டிய கொம்புகளை பிரித்து விறகாக ஆக்கி மனைவியிடம் கொடுக்க அவர் அதை விறகாக்கி ஈர நெல்லை வறுத்து குத்தி அரிசியாக்கி அதை சமைத்து சிவனடியாருக்கு அளிக்க அவர் படுத்திருந்த இடத்திற்கு சென்று அடியாரை எழுப்பினார். அப்போது இறைவன் சிவபெருமான் உமாதேவியோடு ஜோதிப் பிழம்பாகத் தோன்றினார். அதைக்கண்டு மாறனாரும் அவருடைய மனைவியும் திகைத்து நிற்க சிவபெருமான் “அப்பா நீயும் உன் மனைவியும் சிவலோகத்தில் இன்புற்று வாழ்வீர்களாக” என்று கூறி மறைந்தார்.


செயற்கரிய இந்தச் செயலைச் செய்ததால் அவர் நாயன்மார்களுள் ஒருவராக **“இளையான்குடி மாற நாயனார்”** என்னும் பெருமையை அடைந்தார்.

நாயன்மார்கள் கதை தொடரும்......



# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## கர்மம்



ஒருவர் செய்கிற கர்மம், அதன் பலன் இவையே மனித வாழ்வின் சுக துக்கங்களுக்கு முதற் காரணம். தெய்வ குற்றம், ஆரோக்கியக் குறைவு முதலியன அமைகின்றன. ஜாதக ரீதியில், வைத்திய ரீதியில், மாந்திரீக ரீதியில் எப்படி வேண்டுமானாலும் பரிகாரம் தேடிக் கொள்ளலாம். நம் கர்மா தீருகிறபோது அவை பலன் தரும். பகவான் விட்டவழி என்று பக்தியோடு நம் வாழ்க்கையை ஈசுவரார்ப்பணம் செய்துவிட்டுப் பேசாமல் கிடக்கிறபக்குவம் இருந்தால், எல்லாவற்றையும் விட அது சிலாக்கியம். அதுவே பெரிய பரிகாரம்; உண்மையான பரிகாரம்.

பூர்வ கர்ம சமாசாரம் எப்படிப் போனாலும் இனிமேலாவது கர்ம பாரம் ஏறாமல் பார்த்துக் கொள்வதே முக்கியம். பழையதற்குப் பரிகாரம் தேடுவதைவிட, புதிய சுமை சேராமல், பாபம் பண்ணாமல் வாழ்வதற்கு ஈசுவரனைத் துணைக்கொள்வதே முக்கியம்.

- தொடரும்..

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை



## சுழல்களில் சிக்குண்ட புழு


சென்றமாத தொடர்ச்சி...

நேரம் செல்லச் செல்ல நதியின் நீர் மட்டம் அதிகமாக வாய்ப்புண்டு என்று நினைத்த புழு, நதியிலிருந்து சற்று தள்ளியிருந்த ஒரு மரத்தின் அடியில் சென்று தங்கிக் கொண்டது.

நீர்ச்சுழலில் சிக்குண்ட புழுவைப் போலவே மனிதனும் பிறப்பென்னும் சம்சார சக்கரத்தில் மாட்டிக் கொண்டு தவிக்கிறான். சுகத்தை எப்படியாவது அடைந்துவிட வேண்டுமென்று மக்கள் முயற்சி செய்கிறார்கள். அப்படிக் கிடைத்த சுகத்தை அவர்கள் ருசி பார்த்ததும், மேலும் அச்சுகத்தைக் கூட்டிக்கொள்ளவும், துன்பத்தை விலக்கிக் கொள்ளவும், அவர்களை எண்ணற்ற பல காரியங்களில் அச்சுகம் ஈடுபடுத்துகிறது. இவ்வாறு, கர்மாவிலும் சுகத்திலும் மனிதர்கள் மாறிமாறி ஈடுபடுவதால் ஒரு சுழற்சி உண்டாகிவிடுகிறது. பிறகு அதிலிருந்து வெளிவரமுடியாமல் அவர்கள் தத்தளிக்கிறார்கள். இச்சுழற்சி, உலகவாழ்க்கை என்னும் நதியில் ஏற்பட்ட ஒரு நீர்ச்சுழலைப்போல் இருக்கின்றது. எப்படி அப்புழு ஒரு நீர்ச்சுழலிலிருந்து மற்றொன்றில் போய் விழுந்ததோ, அப்படியே மனிதனும் இறந்த பிறகு, ஒரு பிறவியிலிருந்து மற்றொரு பிறவியை அடைகிறான். கர்மா - சுகம் மற்றும் பிறப்பு - இறப்பு ஆகிய இவ்விரு சக்கரங்களிலும் மாட்டிக்கொண்டு, தப்பிக்க வழி தெரியாமல் தவிக்கும் ஒருவனைக் காப்பாற்றுவதற்கு, மேலே உதாரணத்தில் புழுவைக் காப்பாற்ற வந்த இரக்க மனம் படைத்தவனைப்போல், சத்குரு தோன்றி அவனைக் காப்பாற்றுகிறார். குருவின் கருணையையும் வழிகாட்டுதலையும் பெற்றுக் கொண்டதும், கரையில் சேர்த்த புழுவைப்போல், அவன் மேற்கொண்டு முயற்சிகளைச் செய்தால், உயிருள்ள பொழுதே அடையும் மோக்ஷ நிலையாம் ஜீவன்முக்த நிலையை அவன் அடைவது உறுதி.

தொடரும்...

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்



### 3-7 : வேதங்களில் முரண்பாடுகள் இல்லை

'உண்மைதான்: அதனாலேயே, அது மனிதனால் இயற்றப்பட்டதல்ல என்று முடிவு கட்ட முடியாது. வேதங்களைப் பலர் இயற்றினார்கள் என்று நாங்கள் சொல்கிறோம். எனவே, வேதங்களின் நெடிய, நீண்ட, விஸ்தாரமே அவை மனிதனின் கைவண்ணங்கள் அல்ல என்ற முடிவுக்குக் காரணமாக அமையாது"

இந்தக் கூற்று சரியானதல்ல; வேதங்கள் மிகப்பெரிய அளவில் விஸ்தாரம் படைத்தவை என்றாலும் அவற்றுக்குள் ஓர் முரண்பாடு கூட இல்லை என்பதைவிட, மேற்சொன்னவற்றிற்கு வேறென்ன மறுப்பு தேவை? வேதங்கள், வெவ்வேறு இடங்களைச் சேர்ந்த வெவ்வேறு மனிதர்களால், வெவ்வேறு காலங்களில் இயற்றப்பட்டிருந்தால், அவற்றுள் முரண்பாடுகள் இருக்க வேண்டும். எந்த இரண்டு மனிதர்களும் ஒவ்வொரு விஷயத்திலும் ஒத்த கருத்தை உடையவர்களாக இருக்க மாட்டார்கள் என்பது மட்டுமல்ல, ஒரே மனிதரே, சில காலத்திற்குப்பின். தன்னுடைய முந்தைய கருத்தையே மறுப்பார் என்பது உலகளாவிய அனுபவம்.

தொடரும்...

## "தெரிந்து கொள்வோம்"

### 4. ஐந்து பவித்திரமான வஸ்துக்கள் ...தொடர்ச்சி

**உச்சிஷ்டம் சிவ நிர்மால்யம் வமனம் ஸவகர்படம்**
**காகவிஷ்டதே பஞ்சைதே பவித்ராதி மனோஹரா!**

**சென்றமாத தொடர்ச்சி :**

**1. உச்சிஷ்டம்** = *எச்சில், 2. சிவ நிர்மால்யம் = சிவபெருமானுக்கு படைத்தவை 3. வமனம் = வாந்தி பன்னி துப்பியது, 4. ஸவகர்படம் = சவத்தின்மேல் விரிக்கும் போர்வை, 5. காகவிஷ்டம் = காக்கையின் மலத்திலே விளைந்த ஒன்று.*

*மேற்கண்ட பாடல் வேதவியாஸரால் மஹாபாரதத்தில் எழுதப்பட்டது. மஹாபாரதத்தை வேதவியாஸர் சொல்லச்சொல்ல விக்னேஸ்வரர் தம் கொம்பை உடைத்து எழுதினாராம். அப்படி எழுதும்போது அர்த்தங்களை புரிந்து கொண்டு எழுதவேண்டும் என்றாராம் வியாசர். ஆனால் விக்னேஸ்வருக்கு சில இடங்களில் அர்த்தம்புரியவில்லை. காரணம் வியாஸர்* **"குஹ்ய"** *பாஷையில் கூறினாராம் (***"குஹ்ய"** *= என்றால் ரகசியம் என்று பொருள்) அதாவது ரகசிய பாஷையில் கூறினாராம். விக்னேஸ்வர் பிரார்த்தித்ததும் அவருக்கு அவற்றின் அர்த்தத்தைக் கூறினாராம்.*

**முதலாவது = எச்சில்** = *பகவானுக்கு பசும் பாலைத்தான் அபிஷேகத்திற்கு பயன்படுத்துவார்கள். பசுவின் மடியிலிருந்து பாலைக் கறக்கும் முன் அதன் கன்றுகுட்டியை பாலைக் குடிக்க அனுமதிப்பார்கள். கன்று குட்டி குடித்ததும் பசுவின் மடிக் காம்புகளில் ஒட்டியிருக்கும் கன்றின் எச்சிலை (உச்சிஷ்டம்) துடைக்காமல் பால் கறக்க வேண்டும் அந்த பால்தான்*

அபிஷேகத்திற்கு பவித்திரமானது என்று சாஸ்திரம் கூறுகிறது.

எச்சில் கலந்த பால். அதனால் தான் வியாஸபகவான் **"உச்சிஷ்டம்'** என்று எச்சிலை பவித்திரமான வஸ்து என்று சொல்லியுள்ளார்.

**இரண்டாவது = "சிவ நிர்மால்யம்"** = பகவானுக்கு படைத்த பொருள் அனைத்திற்கும் "நிர்மால்யம்" என்று பொருள். பொதுவாக ஸ்ரீவைஷ்ணவர்கள் சிவ நிர்மால்யத்தை ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் உட்கொள்ளாமல் தலையில் தெளித்துக்கொள்ளும் ஒரு சிவ நிர்மால்யம் உள்ளது. அதுதான் சகலலோக பாவங்களையும் தீர்க்கும் **"கங்காஜலம்".** சிவனுடைய சிரஸிலிருந்து வரும் அந்த கங்கா ஜலத்தை அனைத்து ஸ்ரீ வைஷ்ணவர்களும் பவித்திரமான வஸ்துவாக ஸ்வீகாரம் செய்கிறார்கள். இதைத்தான் வியாஸர் "சிவ நிர்மால்யம்" பவித்திரமானது என்றார்.

**மூன்றாவது = வமனம்** = வாந்தி எடுத்து துப்பியது. இது எப்படி பவித்திரமாகிறது? ஆயுர்வேதங்களில் ஔஷதமாகச் சொல்லப்படுவது **"தேன்".** பகவானுக்கு அபிஷேகத்திற்கு உபயோகப்படுத்தும் பொருட்களில் **"தேன்"** முக்கியமானது. தேனீக்கள் மகரந்த மலர்களில் உள்ள தேனை தன் வாயினால் உறிஞ்சி எடுத்துவந்து தன்னுடைய கூட்டில் தேனை கக்கி (வாந்தி எடுத்து) சேகரிக்கிறது. அந்த தேன்கூட்டை கலைத்து அதிலிருந்து எடுக்கும் தேன்தான் பகவானின் அபிஷேகத்திற்கு பவித்திரமானது. இதைத்தான் "வமனம்" பவித்திரமானது என்றார் வியாஸபகவான்.

மற்ற இரண்டு வஸ்துக்களுக்கும் பொருளையும் விளக்கத்தையும் அடுத்த மாதம் பார்ப்போம்.

தொகுப்பு : **செங்கதிரோன்**

## ஔவையார்

# "மூதுரை"

**"மூதுரை"** = *முதுமை + உரை = மூதுரை பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டிருப்பதால்* **"மூதுரை"** *என அழைக்கப்படுகிறது. இந்நூலில் மொத்தம் 30 வெண்பாப் பாடல்கள் அமைந்துள்ளன.*

### வெண்பா – 5

**அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி**
**எடுத்து கருமங்கள் ஆகா – தொடுத்த**
**உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்**
**பருவத்தால் அன்றிப் பழா.**

**பொருள் :** *கிளைகளோடு கூடிய நீண்ட மரங்களும் பருவத்தில் மட்டும் பழங்களைத் தரும். அது போல் மேன்மேலும் முயன்றாலும் நாம் செய்யும் கார்யங்கள் தகுந்த காலம் கூடினால் மட்டுமே பயன் தரும்.*

*விளக்கம் : நம் வீட்டிலோ அல்லது தோட்டத்திலோ பெரிய மாமரம் இருந்தால் இது கோடையில்தான் காய்த்து பலன் தரும். மற்ற மாதங்களில் நாம் என்ன செய்தாலும் அது காய்க்காது. அதற்கு காய்க்க வேண்டிய காலம் வரவேண்டும். அது போலவே நாம் ஒரு செயலை செய்ய ஆரம்பித்தால் அது எப்போது முடிக்கப்படும், எப்போது வெற்றி கிடைக்கும் என்பது நம் கையில் இல்லை. நாம் விடாது முயற்சி செய்துகொண்டே இருக்க வேண்டும். அது முடியவேண்டிய நாளில் கட்டாயம் முடியும்.*

.

தொகுப்பு : **பரிதி**

இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** வேளச்சேரி



# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

**2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"**



There has never been, nor will there ever be any gift equal to the gift of food..."
(Mahabharat - Anusasana Parva, 13.63.-6)



V Krishnamoorthy
Managing Trustee

பிரதி பலன் கருதாது நீ செய்யும் தர்மங்களால் கிடைக்கும் ஆனந்தமே மோக்ஷம். இது இப்பிறவியிலேயே கிடைக்கும். மறு ஜன்மம் வரை தர்மவான்கள் காத்திருக்க வேண்டாம்.

- ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்

ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு கொடுத்து அவர்கள் உயிர் வாழ உதவுவதே எங்கள் லட்சியம்... எந்நிலையிலும் இறைவன் அருளால் அதை நிச்சயம் தொடர்வோம்... உங்களது மேலான நிதி உதவியுடன்..!!



அடையாறு கேன்சர் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் காலங்களில் நமது நம்ம தர்ம சாலாவில் தஞ்சம் புகும் ஏழை புற்றுநோயாளிகள் அனைவரையும் தனது உறவாக கருதி அவர்களது நலன் காக்கும் நமது நிர்வாக அறங்காவலர் அவர்கள் 28.1.2023 அன்று தனது **80வது பிறந்த நாளை** நமது நம்ம தர்மசாலாவில் தங்கியுள்ள ஏழை புற்றுநோயாளிகளுடன் கொண்டாடி மகிழ்ந்தார்.





மேலும், ஏழை புற்று நோயாளிகளுக்கும் அவர்தம் உதவியாளர் களுக்கும் புத்தாடை; சிறிதளவு பணம்; விருந்து உணவு ஆகியவற்றை நமது





நிர்வாக அறங்காவலர் அவர்கள் தனது கரங்களால் வழங்கி, ஏழை புற்றுநோயாளி களின் மகிழ்ச்சி கண்டு உள்ளம் நெகிழ்ந்தார்.

இவ்வினிய நிகழ்வில் சின்னத்திரை நடிகை திருமதி **கவுதமி** அவர்கள் பங்கேற்று ஏழை புற்றுநோயாளிகளுடன் உரையாடி மகிழ்ந்தார்.



செங்கல்பட்டு – மாமண்டூரில் நமது **ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு இலவச முதியோர் இல்ல** கட்டிடப் பணிகள் இறைவன் அருளாலும், ஸ்ரீ ஜயேந்திர பெரியவா அனுக்ரஹத்தாலும், மனித நேயம் மிக்கவர்களின் பிரார்த்தனையாலும் சிறப்புடன் நடைபெற்று வருகிறது. 2024 தை மாதம் முதல் ஆதரவற்ற முதி யவர்கள் **சௌகர்யமாகவும் - நிம்மதியாகவும்** தங்கும் வகையில் சுமார் ஏழு கோடி ரூபாய் செலவில் பிரம்மாண்டமாகவும், முதியவர் களுக்குத் தேவையான அனைத்து அம்சங்களுடன் அமைய உள்ள நமது முதியோர் இல்லத்திற்குத் தேவையான நன்கொடை

முழுவதும் குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைத்துவிடும் என்பது எங்களது திடமான நம்பிக்கை. **முற்றிலும் இலவசமாக** செயல்பட உள்ள நமது முதியோர் இல்ல கட்டிடப் பணிகளுக்கு **ரூ.5,00,000/-** வழங்கும் நன்கொடையாளர்கள் விரும்பும் பெயரில் இம்முதியோர் இல்லத்தில் முதியோர் தங்கும் அறை ஒன்று அமைக்கப்படும். தாங்கள் விரும்பிய தொகை வழங்குவோரின் பெயர்களும் தகுந்த முறையில் பதிவு செய்யப்படும். **இந்தக் கனவுத் திட்டம் சிறப்பான முறையில் நிறைவேற உங்கள் அனைவரின் நல்லாசியையும்; தாராளமான நிதி உதவியையும் மனதார வேண்டுகிறோம்.** 🙏



முதியோர் இல்ல அஸ்திவாரத்திற்கு
தேவையான கம்பி வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகிறது.

## தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்

- ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
- ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
- ரூ.25,000/- நிதியளித்து **"நம்ம தர்மசாலா"**வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்
- ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.

Account Name: SRI MATHA TRUST Bank : INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20 Current A/c No.:163502000001090
IFSC: IOBA0001635

வெளிநாட்டு வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களது நன்கொடையை கீழ்காணும் எங்களது FCRA A/c-க்கு அனுப்பலாம்
NAME : SRI MATHA TRUST S.B. A/C No. : 40384754521
BANK : STATE BANK OF INDIA BRANCH : NEW DELHI MAIN BRANCH
IFSC : SBIN0000691 SWIFT : SBININBB104

Donations to our Trust is exempted U/S.80(G) of the Income Tax Act.

Sri Matha Trust PAN No. **AACTS9747G**

நன்கொடை வழங்கும் அன்பர்கள் தங்களது விலாசம் மற்றும் "PAN" நம்பரை எங்களுக்கு அனுப்பவும்.

Admin Office: 95/42, Flat No.3, Ground Floor, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai-20. Tel: 044 - 24420727, 42661687

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647

9500001065 / 9003247857 vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Shri Meera Labs Pvt Ltd
Contact
9952972436 / 7824807801
WOPPER

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 26

பெற்றதாய் தந்தைக்கு ஈடானவர் ஆசிரியர். ஒரு நல்ல ஆசிரியருக்கு இத்தகைய பண்புகள் இருக்க வேண்டும் எனும் பெரிய பட்டியல், தமிழ் இலக்கியம் ஆசிரியர்கள் எப்படியிருக்க வேண்டும் என்று கூறுகிறது. ஒரு ஆசிரியர் அல்லது ஆசிரியை எப்படி உடுத்த வேண்டும், எப்படி பேச வேண்டும், என்ன செய்யலாம், என்ன செய்யக்கூடாது என்றெல்லாம் பக்கம் பக்கமாக எழுதுவதும், பெற்றோர்கள் ஓயாது பேசுவதும் இன்றைய காலகட்டத்தில் உள்ளன.

முதலில் சமூகத்தின் கண்களுக்கு புலப்படாத முக்கியத் தூண்களான ஆசிரியப் பெருமக்களிடம் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும், நம் குழந்தைகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும், பயம் என்பதை விட மரியாதை என்பது எவ்வளவு முக்கியம் என்றெல்லாம் யார் பேசுகின்றார்கள்?

அதுவும் கடந்த இரண்டு வருடங்களாக ஆசிரியர்கள் ஜாதி, மத, இனம், அடிப்படையில் படும் அவமானங்கள், அவர்களைப் பற்றி வெளிவரும் அவமானகரமானச் செய்திகள் கண்டு மனம் நொந்து போகிறது.

பெற்றோர்களும், கல்வி நிலையங்களும் அளிக்கும் ஊக்கத்தினால் தானே ஆசிரிய சமுதாயம் மேன்மேலும் அறிவாற்றலில் முன்னேறஇயலும். இன்று ஊக்கமளிப்பதற்கு பதிலாக சதா புகார்கள் தான் அடுக்கப்படுகின்றன.

*பெற்றோர்கள் – ஆசிரியர்கள் இவர்களுக்கிடையே இருப்பவர்கள் யார்? நீங்கள் பெற்ற குழந்தைகளல்லவா? இதை ஏன் சிறிதளவு கூட யோசிப்பதில்லை.*

**“தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்**
**என்குற்றமாகும் இறைக்கு”.** **(அதிகாரம் – 44, குறள் – 436)**

*“பிறருடைய குற்றத்தைச் சுட்டிக்காட்டும் முன்பு தன் குற்றங்களை முதலில் நீக்கிக் கொண்டு, அதன் பிறகு பிறர் குற்றத்தை கண்டிக்கும் தலைவனுக்கு ஒரு துன்பமும் ஏற்படாது” என்று வள்ளுவர் மிகப் பெரிய தலைமைப் பண்பை பற்றிக் கூறுகிறார்.*

*“நாங்களா குற்றவாளிகள்?” என்று பெற்றோர்கள் என்னிடம் சண்டைக்கு வருவதற்கு முன் ஆசிரியப் பெருமக்களிடம் நாம் எதிர்பார்க்கும் விஷயங்கள் என்னவென்று காண்போம்.*

*1. இன்று ஒரு ஆசிரியர்* 'Google Search' *(கூகுள் தேடல்) இன் பிரதியாக “கடகட” என்று தகவல்களை கூறிவிட்டு சென்றுவிட வேண்டும்.*

*2. “ஆச்சார்ய தேவோ பவ” என்று கூறியது அந்த காலம். இன்று அவர்கள் சிநேகிதி அல்லது நண்பனாக பழக வேண்டும். அதனால் தேவையில்லாமல் குழந்தைகள் விஷயத்தில் மூக்கை நுழைக்கக்கூடாது.*

*3. டீச்சருக்கு எதுவும் தெரியாமல் வந்து விடுகிறார்கள். ட்யூஷன் தான் அவர்களது அடிப்படை ஆர்வம். பள்ளியில் சம்பளத்திற்கு தானே வேலைச் செய்கிறார்கள்.*

*4. “எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்” எனும் அதிவீர ராம பாண்டியன் கூறியது அந்த காலம். இது வேறு காலம். இன்று 100% மார்க் போடுபவர் தான்*

*(கவனிக்கவும் – போடுபவர்) சரியான ஆசிரியர்.*

*5. பள்ளியோ அல்லது கல்லூரியோ "மலர் டீச்சர்" போல நடக்கும் தவறுகளை கண்டுங்காணாமல் அன்பு (கவனிக்க – காதல்) புரியத் தயாராகயிருக்க வேண்டும். திட்டக்கூடாது, தவறுகளைக் கண்டித்து பேசக்கூடாது.*

*6. ஆசிரியர்களும், தொழிலாளிகள் போன்றவர்கள் தானே. கார்ப்பொரேட் பள்ளியோ, கார்ப்பொரேஷன் பள்ளியோ, யாருக்கோ பதில் கூறவேண்டிய அவசியம் அவர்களுக்கு தானே. நாம் கட்டணம் (Fees) கட்டுகிறோம். நம் கடமை குற்றம் காண்பது மட்டுமே. மேற்கூறியவற்றைப் பற்றி அடுத்த மாதம் பேசலாமே.*

*தொடரும்...*

## வாழ்த்துகிறோம்

## உபநயன ப்ரம்மோபதேசம்

**நாள் :** *16.02.2023,* குருவாரம்

**இடம் :**

ஸ்ரீ கணபதி சச்சிதாநந்த ஆஸ்ரமம், வேளச்சேரி

வேளச்சேரி வேதபாரதியின் மூத்த உறுப்பினர்கள்
ஸ்ரீ M.A. நாகராஜன் - ஸ்ரீமதி சாந்தா நாகராஜன்
அவர்களின் குமாரர்
சிரஞ்சீவி M.N. சுரேஷ் - சௌ. S. சுஜாதா
அவர்களின் குமாரன்
**சிரஞ்சீவி. குருச்சரண் (எ) மார்க்கபந்து சர்மா**
சீரோடும், சிறப்போடும்
வேத ஸம்ஸ்காரங்களுடன் வேதோக்தமாக
எல்லா வளமும் நலமும் பெற்று
வாழ எல்லாம் வல்ல பரமாச்சாரியார்
பொற்பாதங்களை வணங்குகிறோம்.

**வேதபாரதி குழுவினர்**

# கோடி காயத்ரீ ஜப யக்ஞம் 2022

*சென்றமாத தொடர்ச்சி....*

*27-ந் தேதி காலை 6.00 மணி அளவில் காயத்ரீ ஹோமம் நிகழ்ச்சியின் விழா கோ பூஜையுடன் தொடங்கியது. இந்நிகழ்ச்சியில் ஹோமத்தில் அமர்ந்து ஹோமம் செய்து கொள்ள பதிவு செய்தவர்களை முறையாக அமரச் செய்து 31 ஹோம குண்டத்திற்கும், ஒரு ஹோமகுண்டத்திற்கு ஒரு வாத்தியார் உட்பட 8 நபர்கள் அமர்த்தப்பட்டு வேலூர் ஸ்ரீ கணேஸ வாத்தியார் அவர்கள் தலைமையில் காயத்ரீ ஹோமமானது மிகவும் சிறப்பாக நடைபெற்றது. சரியாக 11 மணி அளவில் ஹோமம் பூர்த்தி செய்யப்பட்டு ஸ்ரீ காயத்ரீ மாதாவிற்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. அதனை அடுத்து பூஜ்ய ஸ்ரீ நெரூர் வித்யா சங்கர ஸ்வாமிகள் அருளாசி வழங்கினார்கள். மற்றும் இதே நேரத்தில் திருக்குடை ஊர்வலத்தில் அண்ணாமலையார் வந்து அனைவர்க்கும் காட்சி தந்ததும் இதில் கலந்து கொண்ட அனைவரையும் எல்லையற்ற மகிழ்ச்சி அடைய செய்தது. ஒரே நேரத்தில் இவை அனைத்தையும் ஒரு சேர காண கிடைத்ததை அனைவரும் பெரும்பாக்கியமாக கருதினர்.*

*இந்த இரண்டு நாட்கள் நிகழ்ச்சிகளும் மிகவும் சிறப்பாக அமைந்திட இவ்விழா கமிட்டியினர் அனைவரும் மிகவும் சிரத்தையுடன் ஏற்பாடுகள் செய்தது மிகவும் வரவேற்கத்தக்கது. ஏப்ரல் மாதம் வேதபாரதி மூத்த உறுப்பினர் ஸ்ரீ சூர்யநாராயணன் அவர்கள் ஆலோசனையும் பெற்று இந்நிகழ்ச்சியின் முன்னேற்பாடாக மருத்துவம், காவல்துறை மற்றும் தீயணைப்பு துறைமற்றும் மழை வந்தாலும் அதனையும் எதிர்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள் போன்ற இவை அனைத்தையும் மிகவும் சிறப்பாக செய்தது*

மிகவும் பாராட்டப்பட வேண்டியது. ஸ்ரீ சங்கரா பள்ளி நிர்வாகமும் இந்நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெற முழு ஒத்துழைப்பும் தங்களின் கைங்கர்ய பணிகளையும் அளித்தது மிகவும் அற்புதம். இந்நிகழ்ச்சியில் பார்வையாளர்கள் உட்பட 900க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டு அன்றைய தினத்தில் பள்ளியே விழாக்கோலத்துடன் காட்சி அளித்தது. இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் மிக்க மகிழ்ச்சி. இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் திருமண விழா விருந்து, உணவு அளிக்கப்பட்டு அனைவருக்கும் ஸ்ரீ காயத்ரீ மாதாவின் பிரசாதம் வழங்கப்பட்டது. வரும்மாதங்களில் இன்னும் சில இடங்களில் இது போன்றஅருமையான நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

சுபம்.


**ஸ்ரீ கோகுல கிருஷ்ணா கோசாலை**

**ஸ்ரீ கிருஷ்ணாமிருதம் பப்ளிக் சாரிடபள் ட்ரஸ்ட்**

**(80 G Available)**

**756 பசுக்கள் பராமரிப்பு செய்யும் ஸ்தாபனம்**

1. கோ பூஜை செய்ய
2. கோ தானம் செய்ய
3. பசு பராமரிப்பு செய்ய
4. பிதுர்கள் திருப்தி அடைய – (மஹாளய பட்ச காலத்தில்)



பசு பாதுகாப்பு செய்வது கோடிபுண்ணியம்

தொடர்பு : **ஸ்ரீ நடராஜன்**

ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் - 602 023

**8940224744 / 9363111799**

# சாதனைப் பறவைகள்

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்

## சிவயோகினிலல்லேஸ்வரி

சென்றமாத தொடர்ச்சி...



அவர்களின் மனம் தூய்மை ஆகியதை அவர்களே உணர்ந்தார்கள். லல்லேஸ்வரியின் சிவயோகினித்தன்மையைப் பரிபூரணமாக உணரத் தொடங்கினார்கள். லல்லேஸ்வரி, இஸ்லாமிய சூஃபிசந்த்களுடனும், இந்து சாது சந்நியாசிகளுடனும் இணைந்து கொண்டார். அவரது வாக்கினில் இறை கவிதைகள் மழையாகப் பொழிந்து கொண்டே இருந்தன. அனைவருக்கும் வாக்தேவியானார்.

ஒரு நாள் லல்லேஸ்வரி, ஒரு துணிக்கடையின் அருகே சென்று கொண்டிருக்கும்போது, சில சிறுவர்கள் அவர் மீது கல்லெறிந்து காயப்படுத்தியதைப் பார்த்துப் பதறிய கடைக்காரர், ஓடோடி வந்து, "இவர்கள் நீங்கள் நினைப்பது போலல்ல, மாபெரும் ஞானி. இனி இப்படிச் செய்யாதீர்கள்" என்று புரியவைத்தார். என்ன தோன்றியதோ தெரியவில்லை லல்லேச்வரி அந்த துணிக்கடைக்காரரிடம், "எனக்கு இரண்டு வஸ்திரம் கிடைக்குமா?'' என்று கேட்டார். உடனே கொண்டுவந்து, லல்லேஸ்வரியின் இரண்டு தோள்களிலும் போட்டார். லல்லேஸ்வரி, தொடர்ந்து நடந்தார். யாராவதும் கடும் சொற்களை வீசினால் அவற்றைஒரு தோள் வஸ்திரத்தில் முடிச்சுக்களாகவும், நல்ல வார்த்தைகளைச் சொன்னால் அவற்றைமற்றொரு தோள் வஸ்திரத்திலும் முடிச்சாகப் போட்டுக்கொண்டே வந்து, கடைக்காரரிடமே

திருப்பிக் கொடுத்து, எடை போடச் சொன்னார். இரண்டும் ஒரே எடையில் இருந்தது ஞானிகளுக்கு இகழும், புகழும் ஒன்றுதான் என்பதை மெளன செய்கையால் விளக்கினார். லல்லேஸ்வரி முகத்திற்கு முன்பு உங்களைப் போற்றுபவர்களே, உங்கள் பின் சென்று தூற்றுவார்கள். இதுதான் நியதி. எனவே இரண்டிற்கும் மனதில் இடம் கொடுக்காதீர்கள் என்று அகிலத்திற்குப்புரியவைத்தார்.

ஒரு கட்டத்தில், லல்லேஸ்வரி அனைத்தும் துறந்து முற்றிலும் வெளியேறி, சிவசம்பிரதாயத்தில் இருந்த ஒரு சாதுவை சந்திக்கிறார். அவரையே குருவாக ஏற்றுக்கொள்கிறார். ஞானோபதேசம் பெறுகிறார். சிவ ஆராதனையில் ஈடுபடுகிறார். ஆனால் சிறிது காலத்திலேயே அதனையும் கடந்த, ஞான அவஸ்தைக்கு ஆளாகினார். அடுத்து நடந்தவை அனைத்தும் ஆன்மீக ஆச்சரியம்! தொடர்ந்து தரிசிப்போம் சிவயோகினி லல்லேஸ்வரி மாதாவை.

தொடரும்...

## ஸ்ரீ பெரியவா பாதுகை

ஜனவரி மாத இதழில் இருந்து லேடீஸ் ஸ்பெஷல் பத்திரிக்கையில் "ஸ்ரீ காஞ்சி மகானின் பாதுகை மகிமை" புதிய பக்தர்களின் பாதுகை அனுபவம் தொடராக வெளிவருகிறது. அனைவரும் வாங்கி படிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். பெரியவா பாதுகை வைத்து பூஜிப்பவர்கள், இதழில் உங்கள் அனுபவமும் இடம்பெறவிரும்பினால் என்னைத் தொடர்பு கொள்ளவும் வேண்டுகிறேன்.

என் தொலைபேசி எண் : **99413 87193.**

அன்புடன் **Dr. ஷ்யாமா ஸ்வாமிநாதன்.**

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

# யானை

*சென்றமாத தொடர்ச்சி..*

*“சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பிற்*
*பட்டுப்பா டூன்றும் களிறு” (குறள் - 597)*

*தன்மீது அம்புகள் புதைத்து புண்பட்டபோதும் யானை தளராமல் தன் பெருமையை நிலைநிறுத்தும்; இதுபோல ஊக்கம் உடையவர் தமக்கு கேடு வந்த போதும் ஊக்கம் இழக்காமல் தம் பெருமையை நிலைநிறுத்துவர் என திருக்குறளும் யானையின் பெருமையை பேசியுள்ளது.*

*கலிங்கத்து பரணியிலும், குறுந்தொகையிலும், நீதி வெண்பாவிலும் யானையின் பலத்தையும், அறிவையும், அன்பையும் மேற்கோள் காட்டியிருக்கும் இடங்கள் ஏராளம்.*

*பண்டைய இலக்கியங்களை விடுத்து தற்கால எழுத்தில் யானையைப் பற்றிய படைப்புகளில் எனக்கு மிகவும் நெருக்கமானது எழுத்தாளர் ஜெயமோகனுடைய ‘யானை டாக்டர்’’. ஜெயமோகனுடைய ‘அறம்’’ தொகுப்பில் வெளிவந்த சிறுகதை இது. யானை டாக்டர் என அழைக்கப்படும் ‘டாக்டர் கிருஷ்ணமூர்த்தி’’ (நீலகிரியில் வாழ்ந்த மனிதர்) எவ்வாறு யானைகளின் நலனுக்காகவே தன் வாழ்க்கையை அர்பணித்தார் என சிறு சிறு காட்சிகளாக அழகாக விரியும். ஒரு கட்டத்தில் அரசாங்க விருது டாக்டருக்கு கிடைத்துவிடும் என அவரைச் சார்ந்தவர்கள் ஆசைப்படுவர். அதைத் துளியும் டாக்டர் சட்டை செய்ய மாட்டார். அதற்கேற்றாற் போல் அவருக்கு விருது கிடைக்காது. அடுத்த நாள் அதிகாலையில் ஒரு சிறிய யானைக் குட்டி அவர் வீட்டின் முன் நிற்கும். யானையுடைய பாதத்தில் காட்டில் மனிதர்களால் தூக்கி எறியப்பட்ட கண்ணாடி*

*பாட்டில் ஆழமாக ஏறி தாங்க முடியாத வலியில் இருக்கும், எப்பொழுதும் போல பொறுமையாக யானைக்கு மருத்துவம் பார்ப்பார். கட்டு போட்டு விட்டு அவருக்கு இவ்வளவு சிறிய யானை தனியாக வந்திருக்க சாத்தியம் இல்லையே எனத் தோன்றும். மெதுவாக தலையை நிமிர்த்தி பார்த்தால் மரங்களின் பின்னே ஏறத்தாழ நூறு யானைகளின் படை. குழந்தை யானைக்கு மருத்துவம் பார்த்ததற்கு பிளிறி அத்தனையும் டாக்டருக்கு நன்றி கூறும். இந்தக் கதையை எவ்வளவு முறை வாசித்தாலும், கேட்டாலும் ஒரு நிமிடம் நெகிழ்ந்து போகும். யானை டாக்டருக்கு எப்பேர்பட்ட விருதும் யானை காட்டும் நன்றியை விட மிகச் சிறியதே. மனிதர்களின் பொறுப்பில்லா தனத்தையும், ஏதுமறியாத ஜீவன்கள் மனிதர்களின் செயல்களால் துன்பப்படுவதை நினைத்தால் மனது பதைபதைக்கிறது.*

*யானைகளைப் பற்றி இப்பொழுது எழுத நினைத்ததற்கு காரணம் அண்மையில் புதுவை மணக்குள விநாயகர் கோவிலின் யானை ‘லட்சுமி’ யின் அகால மறைவே. அந்த ஊருக்கே செல்ல பிள்ளையாய் வலம் வந்திருக்கிறாள் என்பது இப்பொழுது ஊர் மக்கள் வெளிப்படுத்தும் சோகத்தில் தெரிகிறது. குறிப்பாக லட்சுமியின் யானை பாகன் தேம்பி தேம்பி அழுத காட்சி கண் முன்னே நிற்கிறது. மணக்குள விநாயகரின் ஸ்வரூபமாகவே லட்சுமி யானையை மக்கள் கண்டுள்ளனர். எவ்வாறு மனிதர்களும் மிருகங்களும் ஒன்று சேர இந்த பூமியில் வாழ வேண்டும் என்பது தெரிகிறது. லட்சுமி யானை புதுவைக்கு காட்டிய அன்பும், அதன் மறைவிற்கு ஊர் மக்கள் காட்டிய பரிவும் இன்னும் நம்மிடையே இரக்க குணம், கருணையும் ஓங்கி இருப்பதற்கான சான்று.*

*முற்றும்.*

**வெ.சிவசங்கரி**

# தருவின் நிழலில்

## பூவரசு - தெஸ்பீசியா

*சென்றமாத தொடர்ச்சி...*

*கோவைக்கு அருகே மேற்கு தொடர்ச்சி மலையில் வரப்பாளையத்தை ஒட்டிய சஞ்சீவி மலைப்பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு பொன்னூத்தம்மன் திருக்கோவிலிலும் ஸ்தல விருட்சமாக இருக்கிறது "பூவரசு". அம்மன் வீற்றிருக்கும் பின் புறத்திலிருந்து இயற்கையாகவே ஊற்று வருவதால் "பொன் மாற்று" என்றழைக்கப்பட்டு தற்போது பெயர் மருவி "பொன்னூத்தம்மன்" என்றாகிவிட்டது.*

*சுமார் ஐநூறு ஆண்டுகள் பழமையான இக்கோவிலில் அமாவாசை, பௌர்ணமி தினங்கள் சிறப்பாக வழிபாடு செய்யப்படுகிறது. மாட்டுப் பொங்கலன்று கிராம மக்கள் அம்மனுக்கு பொங்கல் வைத்து சிறப்பு பூஜை செய்கின்றனர். இதில் காட்டில் விளையும் ஒருவகை "உணாம் பூ" அன்னைக்கு விசேஷமாக சாத்தப்படுகிறது.*

*மார்கழி மாதங்களில் வீட்டு வாசலில் கோலமிட்டு பசுஞ்சாணத்தை உருட்டி கோலத்தின் நடுவில் வைத்து அதன் மீது பரங்கி புஷ்பத்தை செருகி வைக்கும் வழக்கம் இன்றைக்கும் உண்டு. சில கிராமப் பகுதிகளில் பரங்கியைப் போன்று பூவரசு புஷ்பத்தையும் வைப்பதுண்டு. பிறகு இந்த சாண உருண்டைகள் வராட்டியாக தட்டி காயவைத்து இதனைக் கொண்டே அடுப்பில் விறகுக்குப் பதிலாக பயன்படுத்தி பொங்கல் வைக்கும் பழக்கம் தமிழர்களின் மரபாகும்.*

*இனிவரும் காலங்களில் நமது புது இல்லங்களை பூவரசு மரத்தினால் உருவாக்கி நலம் பெறுவோம்.*

**ஆதிரையன்**

# "வேதபாரதி"யின் வளர்ச்சி
# பகுதி - ௨

*பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் 2000ஆம் ஆண்டு முதல் திருப்பூர் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம மண்டலியின் வேண்டுகோளுக்கிணங்க, திருப்பூரில் பல ஜப யக்ஞங்களையும், ஸ்ரீ விஷ்ணு, ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணங்களையும் நடத்தியுள்ளார்கள்.*

*2001 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் திருப்பூர் விஷ்ணு ஸஹஸ்ரநாம மண்டலி உறுப்பினர்களிடம் நீங்கள் எல்லாம் ஸ்ரீருத்ரம் கற்றுக் கொள்ளுங்கள். பொது மக்கள் எல்லோரும்* **'ஓம் நம:சிவாய'** *ஜெபிக்கட்டும் என்று ஆக்ஞையிட்டார்கள்.*

*ஸ்வாமிகளின் வழிகாட்டுதலின்படி திருப்பூர் டாக்டர்.கே.நடராஜன் தலைமையில் நடந்த நிகழ்ச்சிகள் :*

*1. 23.12.2001 = ஸ்ரீ மஹா ருத்ரம்*

*2. 24.12.2001 = 1000 பக்தர்கள் கலந்துகொண்ட 100 கோடி 'ஓம் நம : சிவாய' ஜெப வேள்வி. ஜப வேள்விக்காக பானலிங்கங்களை பெங்களூருவிலிருந்து இரயிலில் கொண்டுவர ஸ்வாமிகள் ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.*

*3. 2003-ம் ஆண்டு = 1000 பேர் கலந்துகொண்ட 'சிவலிங்க பூஜை'.*

*4. 2005ம் ஆண்டு = ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஜப யக்ஞம்.*

*5. 2006 ம் ஆண்டு = ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஜப யக்ஞம்.*

*6. 2007 ம் ஆண்டு = ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஜப யக்ஞம். யக்ஞத்தில் 'வைதீக ஸ்ரீ' மாதாந்திர இதழின் ஆசிரியர் ப்ரும்மஸ்ரீ ராஜகோபால் கனபாடிகள் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம் குறித்து சிறப்புரை ஆற்றினார்கள்.*

2008 ஆம் ஆண்டு மிக மிக முக்கியமான ஆண்டு. இந்த ஆண்டில் இரண்டு முக்கிய நிகழ்வுகள் நடந்தன.

**முதல் நிகழ்வு :** ஸ்வாமிஜி தம்முடைய ஆன்மிகக் கருத்துக்களை ஒரு புத்தகமாக இயற்ற விழைந்தார். அதற்காக அவர் தேர்ந்தெடுத்த இடம் பெங்ளூருக்கு அடுத்த பிடரியில் இருக்கும் ஸ்ரீ சந்திரா அவர்களின் இல்லம். அந்த இல்லத்திற்கு கடலூர் என்.ஆர்.ஸத்யமூர்த்தி அவர்களை வரவழைத்து ஸ்வாமிஜி வாசகங்களைச் சொல்ல சொல்ல அதை ஸ்ரீ என்.ஆர்.ஸத்யமூர்த்தி அவர்கள் ஆங்கிலத்தில் எழுதினார். அந்த புத்தகம் **'Foundation of Dharma'** என்ற பெயரில் 2006 ஆம் ஆண்டு வெளிவந்தது. அது தமிழில் மொழி பெயர்க்கப்பட வேண்டும் என்று ஸ்வாமிஜி நினைத்தார். தமிழில் மொழிபெயர்க்கும் பணியை கடலூர் திரு.என்.ஆர்.ஸத்யமூர்த்தி அவர்களிடமே ஸ்வாமிஜி ஒப்படைத்தார். அவருக்கு திருப்பூர் பேராசிரியர் ஸ்ரீ ஞானபூபதியும், திருப்பூர் ஸ்ரீ வேணுகோபால் அவர்களும் சென்னை ஸ்ரீ பி.என்.பரசுராமன் அவர்களும் உதவியாக இருந்தார்கள்.

புத்தகத்திற்கு **'தர்மத்தின் குரல்'** என்ற தக்க பெயரைச் சூட்டியவர் மதிப்பிற்குறிய **'ஸ்ரீ க்ருஷ்ண ஜகந்நாதன் ஜி'** அவர்கள். புத்தகத்தை அச்சடிக்கும் பொறுப்பை ஏற்று விரதமிருந்து அச்சிட்டவர் திருப்பூர் குமாரசாமி பிரிண்டிங் பிரஸ் உரிமையாளர். திரு.கே. குமாரசாமி அவர்கள் புத்தகத்தின் பதிப்பாளர் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம மண்டலி, திருப்பூர்.

பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளின் அருளாசியுடன் **'தர்மத்தின் குரல்'** என்ற புனித நூல் 2008ம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளியிடப்பட்டது. புத்தகத்தை பூஜ்யஸ்ரீ ஓங்காரானந்தா ஸ்வாமிகள் தம்முடைய திருக்கரங்களால் வெளியிட்டார்.

இரண்டாம் நிகழ்வு அடுத்த மாதம்.

**தொகுப்பு : பகலோன்.**

## பாவை விழா 2023

*08.01.2023 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ ஸங்கர வித்யாலயா. தாம்பரம் பள்ளியில் நடைபெற்றது. 16 பள்ளிகளிலிருந்து 160 க்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டார்கள். 16 நடுவர்கள் குழந்தைகளுக்கு திருப்பாவை, திருவெம்பாவை ஒப்புவித்தல் போட்டி நடத்தினார்கள். காலை 9.30 மணி முதல் 11.00 மணி வரை போட்டிகள் நடைபெற்றன. போட்டிகள் நடக்கும் போது பெற்றோர்களுக்கு பாரத பண்பாட்டு செய்திகளும், பெற்றோர்களே கவனியுங்கள் பாகம் – 2 புத்தக வெளியீட்டு விழாவும் நடைபெற்றது. வெற்றி பெற்றகுழந்தைகளுக்கு திருப்பூர் கிருஷ்ணன். டாக்டர் ஷ்யாமா, ஸ்ரீமதி கலைவாணி, ஸ்ரீமதி காந்தலட்சுமி சந்திரமௌலி ஆகியோர் பரிசுகள் வழங்கி ஊக்கப்படுத்தினார்கள்.*

*தாம்பரம் ஸ்ரீ வெங்கடேசன் ஜி வரவேற்புரை வாசித்தார். ஸ்ரீ நரேந்திரன் ஜி நன்றியுரை வாசித்து விழாவை சிறப்பித்தனர் நங்கநல்லூர் ஸ்ரீ பவமான ஆஞ்சநேயர் கோவில் மூலம் பெரியவர்களுக்கும், குழந்தைகளுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. வேதபாரதி குழுவினர் 07.01.2023 மற்றும் 08.01.2023 இரண்டு நாட்களும் மிகச் சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். கடந்த ஒரு மாத காலமாக தாம்பரம் ஸ்ரீ ராமசுப்ரமணியம், தாம்பரம் ஸ்ரீ நாராயணன் அவர்களும் நிகழ்ச்சியினை வடிவமைத்தல் பள்ளிகள் தொடர்பு விழா சிறக்க செய்ய வேண்டிய ஏற்பாடுகளை மிகவும் சிறப்பாக செய்து கொடுத்தார்கள். சான்றிதழ்கள் எல்லா பள்ளிகளுக்கும் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.*

*ஆசிரியர்.*


உ
திருமண பொருத்தம் இலவசம்
(அனைத்து சமூகத்தினருக்கும்)
வாட்ஸ்அப் மூலம் மட்டும்
பையன்கள் பெண்கள் ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில் அனுப்புதல் வேண்டும்.
Brahmin Kalyanam.com
An Auspicious Beginning ...
EXCLUSIVE PORTAL FOR BRAHMINS
BK MATRIMONY
An Auspicious Beginning ...
தேதியூர். V.J. ராமன்
ஆத்மார்த்த ஜோதிடர்
9003195599
9445230940

# இராமாயணம் வாழ்வியல்

சென்றமாத தொடர்ச்சி....

பிறகு விஸ்வாமித்ரர் கங்கை வரலாற்றை பற்றி கூறுகிறார். பகீரதன் தன் முன்னோர்கள் நற்கதியை அடைய வேண்டும் என்ற காரணத்தினால் கங்கையை பூமிக்கு கொண்டு வந்தான். நமது பித்ருக்கள் கரையேறினால் தான் தாம் நிம்மதியாக வளமாக வாழமுடியும் என்பதை இராமாயணம் வலியுறுத்துகிறது. இன்றும் அதே கங்கை நமது பித்ருகளையும் தொடர்ந்து கரையேற்றிவருகிறாள். **விடாமுயற்சி வெற்றி தரும்** என்பதற்கு பகீரதன் முன் உதாரணம்.

இராமரின் பாததூளி பட்டு அகல்யை சாபவிமோசனம் பெற்று மீண்டும் பழைய நிலையை எய்துகிறாள். எத்துணை பெரிய பாபங்கள் செய்தாலும் அதன் பலனை கண்டிப்பாக அனுபவிக்க வேண்டும். அதிலிருந்து விடுதலை பெற வழியும் உண்டு என்று அகல்யை சாபவிமோசனம் மூலம் தெரிய வருகின்றது. எந்த நிலையிலும் ஒருவன் புதிய அறவாழ்க்கையை தொடங்க முடியும். உயர் லக்ஷியத்தை எட்ட முடியும். பரிபூரணமான இறைவனை நோக்கி மனிதன் செல்லவும் முடியும் என்பதைத்தான் இராமாயணம் கூறுகின்றது.

பிறகு தசரதரின் நான்கு புத்திரர்களுடன் ஜனகனின் புதல்விகள் முறையே சீதை, ஊர்மிளா, மாண்டவி, சுருதகீர்தியுடன் கோலாகலாமாக திருமணம் நடந்தது. இன்றும் கூட சீதாகல்யாணம் வீட்டிலோ பொதுவிலோ நடத்தினால் நல்லது நடக்கும் என்பது மக்களின் அசைக்கமுடியாத நம்பிக்கை. திருமணம் முடிந்து எல்லோரும் அயோத்தி திரும்பினர்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு இராமருக்கு இளவரசுப் பட்டம் சூட்ட தசரதர் முடிவெடுத்தார் -

சுயமாக அல்ல. அவையோரைக் கூட்டி அனைத்து உறுப்பினர்களின் சம்மதத்துடன் அந்த நிகழ்ச்சியை நடத்த தீர்மானம் செய்தார். மன்னர் ஆட்சி என்ற போதும் எல்லாம் ஜனநாயகமாக நடந்தது. இராமருக்கு நடத்தப்படும் இந்த யுவராஜ்ய பட்டாபிஷேகம் கைகேயியின் தோழி மந்தரைக்கு (கூனி) பிடிக்கவில்லை. அவள் அதை கைகேயி மூலம் தடுக்க முயற்சி செய்தாள். வெற்றியும் பெற்றாள்.

தசரத மன்னன் கைகேயி மீதுள்ள காதலால் அவள் கேட்ட வரத்தைக் கொடுத்துவிட்டு சொல்லொணாத் துயரம் அடைகிறான். **நம்முடைய எல்லாத் துன்பங்களுக்கும் காரணம் ஆசையே.** கைகேயின் மீது வைத்த அபரிமிதமான ஆசையால் பல அனர்த்தங்களுக்கு ஆளானான் தசரதன். இறுதியில் தனது உயிரையே விடக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டான். நடந்த விபரங்களை கைகேயி மூலம் இராமன் கேள்விப்பட்டான். அதை தசரதர் கொடுத்த வாக்காகவே எடுத்துக் கொண்டு தனது மனைவி சீதை மற்றும் தம்பி இலக்குவனுடன் வனம் செல்ல புறப்பட்டான். கௌசல்யை அடைந்த துன்பத்திற்கு அளவே இல்லை. இலக்குவன் கோபமடைந்து கைகேயி தசரதன் பற்றித் தோன்றியபடி நிந்தித்தான். பெரியவர்களை அவ்விதம் பேசக்கூடாது என இராமர் அறிவுரை கூறி இலக்ஷ்மணன் கோபத்தை கட்டுப் படுத்தினார். இந்த இடத்தில் கம்பர் -

'நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை; அற்றே
பதியின் பிழையன்று பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று, மகன் பிழையன்ற மைந்த
விதியின் பிழை நீ இதற்கு என்னை வெகுண்டது''

என்று இராமர் சமாதானம் கூறினார்.

தொடரும்...

**காந்தாமணி நாராயணன்**

## கோடி காயத்ரீ ஜபம் ஹோமம் திருச்சி 2022

இந்திய நாடு பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்களைக் கொண்டுள்ளது. அந்தந்த மதங்களைச் சார்ந்தவர்கள் அவர்களது மதம் சார்ந்த கலாசார பண்பாடுகளைப் போற்றிப் பாதுகாக்க முற்பட வேண்டும். அந்த வகையில் நமது மதம் சார்ந்த கலாச்சாரங்களை அதன் வழியிலே நமது ஆண், பெண் குழந்தைகள் பின்பற்ற வேண்டும். அந்த அடிப்படையில் நமது முன்னோர்கள் நமது மதகுருமார்கள் குறிப்பாக காஞ்சி, சிருங்கேரி பெரியவர்கள் நல்ஆசியுடன் மேற்கண்ட நோக்கத்தை நிறைவேற்ற ஆரம்பிக்கப்பட்ட வேதபாரதி என்ற அமைப்பானது குழந்தைகளுக்கு ஸ்லோகம், வேத வகுப்புகள், யுவஸ்ரீ என்ற பெண் குழந்தைகளுக்கான நிகழ்ச்சி, ஸந்த்யாவந்தன வகுப்பு மற்றும் கேம்ப் ஆகியனவற்றை செவ்வனே நடத்திவருகிறது.

இதன் ஒரு பகுதியாக நமது சமூகத்தைச் சார்ந்த பிரம்மச்சாரிகள், கிரஹஸ்தர்கள் அனுஷ்டானங்களைச் சிரமேற்கொண்டு தவறாமல் அனுஷ்டிக்க வலியுறுத்தப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக உலக க்ஷேமத்திற்காகவும், பொதுமக்களின் நன்மைக்காகவும் நாட்டின் சுபிட்சத்திற்காகவும் காயத்ரீ ஜபங்களை தொடர்ந்து செய்து கோடி காயத்ரீயாக பூர்த்தி ஹோமத்தை நடத்துவது என்ற அடிப்படையில் முடிவெடுக்கப்பட்டது. முதலில் இந்த நிகழ்வு சென்னை போன்ற நகரங்களில் நடைபெற்றது. பின்பு பாண்டிச்சேரி, திருப்பூர் போன்ற பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. தற்போது திருச்சி நகரில் வெற்றிகரமாக சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

தொடரும்...

# மனம் தரும் தனம்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

சென்றமாத தொடர்ச்சி...

“மனம் எனும் தோணி பற்றி மதியெனும் கோலையூன்றிச்
சினம் எனும் சரக்கையேற்றி செறிகடல் ஓடும்போது
மதன் எனும் பாறை தாக்கி மறியும் போது அறிய ஒண்ணாது
உனை உனும் உணர்வை நல்காய் ஒற்றி யூருடைய கோவே”

என்பது அவரது தேவாரம்,

**ஓர் நகை தோல் விக்கும் காரணம் :**

ஆரணியத்தில் இராமனைக் கண்டு அவன் வடிவழகில் தன் மனத்தை இழந்து அவனை அடைய ஆசைப்பட்டு தன்னை அழகுடையவளாய் உருமாற்றம் செய்து வருகிறாள் சூர்ப்பநகை. அப்போது அவள் கபடமனம் உடையவளாகித்தாப மனம் கொண்டு தன் சக்தியை இழந்து ஆற்றானாகி,

‘ஏழுறும் உயிர்க்கு நோவேன் என் செய்வேன்” என்று பிதற்றுகிறாள். இராமனிடம் முதலில் சொல் மனப்படும்போது இவள் புகழ்ச்சி மனம் கொண்டு, உலக மூன்றும் காவலோன் பின்னை; காமவல்லியாம் கன்னி என்றாள்.

காமவல்லி எனத்தன் பெயரை அவள் மாற்றிக் கூறியது தன் செயல் மனத்தைக் காட்டிடவே, அதாவது கற்பக மரத்தைச் சுற்றியிருக்கும் காமவல்லியின் கொடிபோல, உன்னை அணைத்திட வந்திருப்பவள் என்பதே அதன் கருத்து. இப்படிப் புகழ்ச்சிமனம், தாபமனம், செயல் மனம் ஆகியவற்றிற்கிடையே நீதிமனமும், குறும்புமனமுமாக,

‘ஆய்வுறு மனத்தளாகி அறந்தலை நிற்பேன்” என்றும் பேசி, மன வழுக்கலுக்கு ஆளாகி

அலைக்கழிக்கப்படுகிறாள். சீதையைக் கண்டு கோபமனமுடையவளாய் அவளுக்கு இன்னல் இழைக்க முற்படுகையில் இலக்குவனால் அவமானப்படுத்தப்பட்டு விரட்டப்படுகிறாள். இவள் மனம் முதல், இடை, கடை என மூன்று நிலைகளிலும் ஒருமைப்படவில்லையாதலால், தான் அடைய நினைத்த பொருளை அடையாததுடன் தன் மனமே தன்னை ஏமாற்றிவிட்ட நிலைக்கு ஆளானாள். இதனையே, 'தன் வினை தன்னைச் சுடும்'' எனப் பழமொழி கூறுகிறது.

''பகைவனுக்கும் அருள் செய்வாய் நன்னெஞ்சே'' என்பதற்கிணங்கப் பகைவனுக்கும் அருள் செய்யும் தன்மை உடையது. இராவணனை நோக்கி, இன்று போய்ப் போருக்கு நாளைவா, என்றான். தம் காரியத்தைத் தாமதப்படுத்தி, சுயநலமின்றி எதிரிக்கும் விட்டுக்கொடுக்கும், கொடை மனம் பெற்ற கோசலை நாடுடைய வள்ளலாகிய இராமனின் மனோநிலையே அவனது வெற்றியின் சின்னமாகிறது.

கர்ணன் பெற்ற முக்தி நிலை :

அர்ச்சுனன் அம்புகளால் வீழ்த்தப்பட்டு குற்றுயிரும் குலையிருமாகப் போர்க்களத்தில் கிடக்கிறான் கர்ணன். அப்போது தம்மிடம் வேதியர் வடிவில் வந்த கண்ணனிடம் தான் செய்த புண்ணியம் அனைத்தையும் ஈந்தவிடுகிறான். தன்னிடம் வரம் வேண்டுமாறு கண்ணன் கர்ணனிடம் கூறும்போது'', இல்லையென்று இரப்போருக்கு இல்லையென்று உரையா இதயம் அளித்தருள் என வேண்டுகிறான். உடல் நிலை நோகும் நேரத்திலும் உள்ளம் பண்பட்டு

*மனதைப் பக்குவ நிலையில் வைத்துக் கொண்டிருக்கிறான் என்பது தெளிவாகிறது. ஆதலான் கண்ணனும் தன் விஸ்வரூப நிலையைக் காட்டி, முக்தி அளித்தான். கர்ணனிடம் நன் மனமும், கடமை மனமும் கொண்டிருந்தமையால் பெரு நிலை பெற்றான்.*

*இப்படியாக ஒருவர் மனமே அவருக்குத் தனமாகிறது. நம்மனம் எங்ஙனம் அமைகிறதோ அவ்வாறே நம் வாழ்க்கை அமைகிறது. தனத்திற்கு அடிப்படையான மனத்தை நல்வழிப்படுத்தி அதனை இறைவன் விற்றிருக்கும் அருட்கோவிலாக அமைத்திடுவோம்.*

*முற்றும்.*

## வருந்துகிறோம்

*26.01.2023 ஊரப்பாக்கம், ஆதனூர் வேதபாரதி பிடி அரிசி திட்ட பகுதிப் பொறுப்பாளர் ஸ்ரீ சிவராமகிருஷ்ணன் தாயார் ஸ்ரீமதி பொன்னம்மாள் இறைவனடி சேர்ந்தார்கள். (வ-97) அம்மாவின் ஆன்மா சாந்தியடைய வேதபாரதி உறுப்பினர்கள் பிரார்த்தனை செய்கிறோம்.*

---

*26.01.2023 குரோம்பேட்டை வேதபாரதியின் மூத்த உறுப்பினர் ஸ்ரீ லலித்குமார் அவர்களின் அன்புத்தாயார் ஸ்ரீமதி நாகலட்சுமி (வ-98) இறைவனடி சேர்ந்தார்கள். அம்மாவின் ஆன்மா சாந்தியடைய வேதபாரதி உறுப்பினர்கள் பிரார்த்தனை செய்கிறோம்.*




Brahmin Kalyanam.com

BK MATRIMONY.com

An Auspicious Begining...

(Exclusive Portal for Brahmins)

பிராமணர்களுக்கு மட்டும்

REGISTER FREE & GET

Brides / Grooms Profiles +
Free Horoscope Matching + ONE YEAR Validity
Membership Fee Rs. 1000 Only.

Astro Guidance By:
**Thethiyur V J Raman**
Aathmartha Jothidar

89397 02500

brahminkalyanam.com@gmail.com

## தி நியூ லைஃப் சாரிடபிள் டிரஸ்ட்

எண் 31/50, "சாய் பார்க்", பெரியாழ்வார் தெரு, சுந்தரம் காலனி,
கிழக்கு தாம்பரம், சென்னை 600059. போன் : 98841 71172/90582 44435
http://www.newlifecharitabletrust.org





# ஆநிரைகளை பராமரிப்பது ஆண்டவனுக்கு செய்யும் சேவை



ஒவ்வொரு நாளும் வயதான மற்றும் நோய்வாய்ப்பட்ட மாடுகள் கைவிடப்பட்டு அவை பிளாஸ்டிக், காகிதம் போன்றவைகளை உண்டு வேதனையான வாழ்க்கை வாழ்கின்றன.

மனிதர்களுக்கு பால் கொடுத்து வந்த புனிதமான பசுக்கள் இப்படி துன்பத்துக்கு ஆளாகலாமா?

நியு லைஃப் சாரிடபிள் டிரஸ்ட் (NLCT) இது போன்ற நிராதரவான பசுக்களை மீட்டு எங்கள் **லக்ஷ்மி நிவாஸ்** கோசாலையில் பாதுகாத்து பராமரித்து வருகிறோம்.

தற்போது எங்களிடம் 95 பசுக்கள் உள்ளன.

கோசாலையிலிருந்து பால் அருகில் இருக்கும் வேத பாடசாலை மற்றும் கிராம குழந்தைகள், பெரியவர்களுக்கு கொடுக்கிறோம். விற்பனை செய்வதில்லை.

கோசாலை பராமரிப்பிற்கு 5 ஆண்கள், 2 மகளிர், தீவனம், மருத்துவ செலவுகள் மற்றும் இதர செலவுகள் நன்கொடை மூலமாக கிடைக்கின்றன. கோசாலை பராமரிப்பிற்கு உங்கள் ஆதரவை வேண்டுகின்றோம்.

நன்கொடையை கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு காசோலையாகவோ, ஆன்லைன் மூலமாகவோ செலுத்தலாம்.

**City union bank**
East Tambaram Branch,
Chennai -600059
SB Account No: 500101010797410
IFSC Code: CIUB0000431

Scan the QR Code to make payment thro Google Pay

அனைத்து நன்கொடைகளுக்கும் 80G கீழ் வரி விலக்கு உண்டு.
FCRA ஆல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தொடர்பு - திருமதி. தீபகலா : +91 98841 71172, 044 - 22399551, 43574464
+91 98841 71172 Office@newlifecharitabletrust.org

எங்கள் கோசாலாவிற்கு வருமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms, Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.
Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071
Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org

## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்



*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CUB கீ செயின் டெபிட் கார்டினை
பரிந்துரைத்து ஊக்க
வெகுமதியை பெறுங்கள்
₹150*
வரை
எவ்வாறு செயல்படுகிறது
STEP 1
நெட்பேங்கிங் மற்றும் மொபைல் பேங்கிங் வாயிலாக கீ செயின் டெபிட் கார்ட் வேண்டி விண்ணப்பிக்கவும்
STEP 2
விண்ணப்பிக்கும் போது பரிந்துரைத்தவரின் மொபைல் எண்ணை பதிவு செய்யவும்
STEP 3
கீ செயின் டெபிட் கார்டு டெலிவரி செய்யும் பொது பரிந்துரைத்தவர் மற்றும் பரிந்துரைக்கபட்டவருக்கு ரூ.50
STEP 4
பரிந்துரைக்கபட்டவருக்கு மேலும் ரூ.50 (ஆக்டிவேஷன் செய்து முதல் பரிவர்த்தனை செய்த பின்)
CUB நெட் பேங்கிங், மொபைல் பேங்கிங் மற்றும் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கவும்
Scan QR Code to Apply
*T&C Apply
RuPay
ON-THE-GO
If you are not an existing CUB Customer, Now you can open Savings & Current account instantly through VIDEO KYC
Simply give a missed call to
+91 88866 10805 (or)
Scan the QR Code
CUB
TRUST AND EXCELLENCE SINCE 1904
சிட்டி யூனியன் பேங்க்
www.cityunionbank.com
ராசியான பேங்க், ஈஸியான பேங்க்
Internet/Mobile Banking | Sovereign Gold Bonds | Chat Bot | Cardless Withdrawal | Fastag | Spend Analyzer | Debit and Credit Card | Prepaid/Travel Card | PoS | Social Media Banking | UPI QR Code for Merchants | Online Mutual Fund | Video KYC Online ASBA | WhatsApp Banking Insta Loan | Wallet | Set Card Limit | Green Pin
For Assistance, call our 24x7 Customer Care : 044 7122 5000

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/21-23
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th February 2023




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜுவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரீக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

______________________________

______________________________

______________________________

______________________________

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.